தமிழ் வாத்தியார்

★

ஆசிரியர்: ம. ரா.

★

மாணவர் பதிப்பக வெளியீடு

1947

விற்பனையாளர் :

பாரி நிலையம்

59, பிராட்வே, — சென்னை.

Printed at
THE MERCANTILE PRESS,
2/45, Muthumari Chetti Street,
Mannady, Madras.

Published by P. P. House,
Madras.

அன்பர்களுக்கு

இதனை யெழுதிய நானும் ஒரு தமிழ் வாத்தியாரே என்பதை மட்டும் முன்னுரையாகக் கூறிக் கொள்கின்றேன்

ம. ரா.

தமிழ் வாத்தியார் 3684

தன்னோடு உடன்பிறந்த தங்கையை வெறுப்பவர்கள் உலகில் யாருமே இருக்கமாட்டார்களென்று நினைக்கின்றேன். உலகில் எப்படியோ; எனக்கென்னவோ தங்கையிடத்தில் மிகுந்த விருப்பம் உண்டு. என்னை வைத்துக்கொண்டு உலகத்தைப் பற்றிப் பேச நான் தயாராக இல்லை. இருந்தாலும் உலகமே நம்மைப்போலத்தான் இருக்கும் என்று நினைப்பதும் இயற்கைதானே. நான் தமிழ் படிக்கத் தொடங்கிய காலம் அது. அர்த்தம் தெரிந்தோ தெரியாமலோ ஒரு பாட்டைப் பல முறை படித்துப் பார்த்தால் பிறகு எல்லாம் சரியாகிவிடும் என்ற என்னுடைய ஆசிரியரின் புத்திமதியைக் கேட்டுக்கொண்டு நடந்தகாலம். கடவுள் வணக்கம், அதாவது "ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன் ஞானகுரு வாணியை உள்நாடு" என்ற பாட்டைச்சொல்ல மறந்து பாடத்தை ஆரம்பித்து விட்டால், கன்னத்தில் போட்டுக்கொண்டு அதை ஒரு முறை சொல்லிவிட்டுப் பிறகு முதலிலிருந்து படித்துக் கொண்டிருந்த காலம் அது. கி. மு. என்று நினைத்துவிடாதீர்கள். கி. பி. யில் நடந்துதான் அது. இன்னம் சிறிது விளக்கமாகச் சொன்னால் என்னுடைய இளமைக்காலந்தான் அது.

பாட்டுக்களைப் படிக்கின்ற பொழுதெல்லாம் தங்கையைப்பற்றி வருகின்ற இடங்களிலெல்லாம் கோடுபோட்டுக்கொண்டே வருவேன். கோடு போடவேண்டிய சந்தர்ப்பமே எனக்கு அதிகமாகக் கிடைக்கவில்லை. அந்த ஆசிரியர்கள் மீது எனக்குக் கோபம்கூட வருவதுண்டு. "மணியில்லாத யானையின் மீது அரசன் செல்வது இன்னா; சேணமில்லாத குதிரை மீது ஏறிச் சவாரி செய்தல் இன்னா" என்றெல்லாம் ஏதேதோ வாய்க்கு வந்தவாறு பாடியிருக்கிறார்களே; தங்கையைப்பற்றி ஏன் பாடியிருக்கக்கூடாது; தங்கையில்லாத பாவிகள் போலிருக்கிறது இவர்கள் என்று மனம் புழுங்குவேன். தங்கையினுடைய குணங்களைப் பற்றியும் அவளின் விளையாட்டுக்களைப் பற்றியும் ஏன் இந்தப் புலவர்கள் பாடியிருக்கக் கூடாது? பாட்டுக்களைத் தேடித் தேடிப் பார்த்து அலுப்படைவேன்.

ஔவையார் பெண்ணாயிற்றே; அவள் ஏதாவது தங்கையைப் பற்றிப் பாடியிருக்கின்றாளா என்று பார்த்தேன். ஒன்றையும் காண-

வில்லை. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று பாடியவள் ஏன் "தங்கையும் தமையனும் பின்னறி தெய்வம்" என்று பாடியிருக்கக்கூடாது. ஒரு வேளை அவள் பாடியிருந்தாலும் இருக்கலாம்; பின்னால் வந்தவர்கள் நாக்கினால் தட்டிப்பார்த்து இது அவளுடைய பாட்டல்ல என்று தள்ளியிருந்தாலும் இருக்கலாம். ஔவையார் என்னிடத்திலிருந்து தப்புவதற்கு இது ஒரு சந்தர்ப்பம் அவளுக்குக் கிடைத்தது. வீணாக அந்தரலோகங்களையும், இந்திரலோகங்களையும் பற்றி வருணிக்கின்ற புலவர்கள் தங்கையைப்பற்றி ஏன் ஒரு நான்கு பாட்டுக்கள் பாடியிருக்கக்கூடாது? எப்படியாவது இந்தப் புலவர்கள் மீது வஞ்சந் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். வாய்த்தது ஒரு சந்தர்ப்பம். ஆனால் அதை இப்பொழுது நினைத்தாலும் தலை கீழே அழுந்துகிறது. தமிழ் வாத்தியார் அன்று வகுப்பில் குட்டிய குட்டுதான்.

மாதா மரிக்கின் மகன்நாவின் நற்சுவைபோம்
தாதா எனிற்கல்வி தானகலும்—ஓதில்
உடன்வந் தோன்மரிக்கில் வாகுவலி போம்மனையேல்
அந்தோ இவையாவும் போம்.

இந்தப் பாட்டுதான் என்னுடைய தலையைத் திருத்தியது. இதற்கு என்ன கருத்து என்று கேட்கின்றீர்களா? தமிழ் வாத்தியார்தான் இதற்குக் கருத்தென்ன; அதற்குப் பொழிப்புரை என்னவென்று கேட்பாரென்றால் நீங்களும் கேட்க ஆரம்பித்து விட்டீர்களா? நான் சொல்லமாட்டேன். என்னுடைய நன்மைக்காக அல்ல உங்களுடைய நன்மைக்காகத்தான் சொல்லுகின்றேன் அடியாத மாடு படியாதல்லவா; என்னைப்போலவே நீங்களும் குட்டுகள் வாங்கினால் தான் இதனுடைய கருத்து உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதோடல்லாமல் மறக்காமலும் இருப்பீர்கள். நான் வேண்டும் என்று சொல்கின்றேன் என நினைக்காதீர்கள். எங்கள் தமிழாசிரியர் அடிக்கடி உபதேசம் செய்து சமயம் வாய்த்த பொழுதெல்லாம் எங்களுடைய நன்மைக்காகக் கையாண்ட முறைதான் இது. "தாயார் இறந்துபோய்விட்டால் மகனுக்கு நல்ல சாப்பாடு கிடைக்காது; தந்தை இறந்துவிட்டால் மகன் படிக்க முடியாது; சகோதரர்கள் இறந்துபோய்விட்டால் பக்கபலம் போய்விடும் என்று மேலே சொன்னேனே; அந்தப் பாட்டிற்கு வியாக்யானம் செய்துகொண்டிருந்தார் வகுப்பில் அந்தக் கரடி வாத்தியார். ஐயையோ சொல்லிவிட்டேனே! நாங்கள் அந்த வாத்தியாயாருக்கு இட்ட பெயர் அது. கறுப்பாக மீசைவைத்துக்கொண்டு இருப்பார் அவர். பேர் பொருத்தந்தானே! தயவுசெய்து இதை அவ-

நூல்களிலே இல்லை என்று அவர் நினைக்கின்றாரா என்று கேட்கின்றேன். யோசித்துப் பாருங்கள் என்று மேஜையை ஒரு தட்டுத் தட்டிக் கைத் தட்டல்களையும் வாங்கிக்கொண்டிறங்கினர்.

பெரியோர்களே! என்று அமைதியான குரலில் ஆரம்பித்தார் மற்றொருவர். நமது சம்பளம் உயர வேண்டுமென்பது எல்லோராலும் ஒத்துக்கொள்ளத் தக்கதுதான். நம்முடைய நிலையோ ஒருபடித்தாக இல்லை. வித்துவான் பரீட்சை பாஸ் பண்ணாதவர்களும் தமிழாசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மீது குறைசொல்லவில்லை. மன்னிக்கவேண்டும். ஆங்கிலம் தெரியாதவர்கள், வித்துவான் மட்டும் பாஸ் செய்தவர்களும் இருக்கிறார்கள். ஆங்கிலம் கொஞ்சம் தெரிந்தவர்களும் அதாவது விண்ணப்பங்களிலே I have studied upto VI Form என்று எழுதுகின்றவர்களும் இருக்கின்றார்கள். B O.L பரீட்சை பாஸ் பண்ணினவர்களும் தமிழாசிரியர்களாக இருக்கிறார்கள். எல்லோருக்கும் L. T. சம்பளம் தரவேண்டுமென்று நாம் கேட்பதுதான் நியாயமா? ஏதோ நாம் கேட்கின்றோம் என்றால் நடக்கவேண்டுமே! இவற்றைபெல்லாம் யோசனை செய்து நமக்குள்ளேயே ஒரு முடிவு வைத்துக்கொள்வது நல்லது. என்று எனக்குத்தோன்றுகின்றது. கொஞ்சம் ஒருவருக்கொருவர் வித்தியாசமிருப்பதுபோல் நாமே ஒரு சம்பளத்தைப் போட்டுக்கொண்டு கேட்பதுதான் நல்லது. கேட்பதை நாமும் நியாயமான வழியில் கேட்க வேண்டும் பாருங்கள்! என்று கூறிப் பெரிய கும்பிடு ஒன்று போட்டுவிட்டு உட்கார்ந்தார்.

எழுந்தார் இளந்தமிழ்ப் பண்டிதர் ஒருவர். பெரியோர்களே! எனக்குமுன் நண்பர் B.O.L. அவர்கள் பேசியதைக்கேட்டீர்கள். இப்படி நாமே விட்டுக் கொடுத்துக்கொண்டு போனால் என்ன நடக்கும்! தமிழாசிரியர்களுக்குச் சம்பளம் இவ்வளவு இருக்கவேண்டுமென்றுதானே நாம் கேட்கின்றோம்! L. T. ஒருவர், Secondary grade ஆசிரியர் வேலை செய்கின்ற இடத்தில் வேலை செய்தால் Secondary grade சம்பளந்தானே கிடைக்கும்! அந்த இடத்திற்கு இன்னதுதான் சம்பளம் இருக்கவேண்டும் என்று சொல்லுகின்றோமேயல்லாமல் அவர்கள் வாங்கியிருக்கின்ற பட்டங்களை யெல்லாம் வைத்து நாம் இப்பொழுது பேசவில்லை. செய்கின்ற வேலைக்குத்தானே கூலி கேட்கின்றோம். நாமே கேட்பதற்கு இப்படி மயங்கினால் என்ன செய்வது! ஒரு நாளைக்கு எல்லோரும் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்தால் எல்லாம் சரியாகிவிடும். உதைக்கின்ற காலுக்குத்தானே முத்தந் தருகின்ற காலமாக இருக்கின்றது இது! இது நடக்குமா?

கொடுக்கின்றார்களா, இல்லையா பார்ப்போமே! இல்லையானால் தமிழைப் பள்ளிக்கூடத்திலிருந்து எடுத்துவிடட்டும். இந்தப் பள்ளிக்கூடங்களினாலேயா தமிழ் வளரப் போகின்றது? தமிழோ வரவரக் கெட்டுப் போய்விட்டது. யார் வேண்டுமானாலும் எதையும் எழுதி வெளியிடுகிறார்கள். பிழைகளோ எண்ணத் தொலையா? இலக்கணத்தை எவன் கவனிக்கிறான்? பேசுகின்ற பாஷையையே எழுத்திலும் வேறு எழுதிக் குட்டிச்சுவராக்குகிறார்கள் தமிழை. இன்னும் நமக்குள்ளே ஒற்றுமை இல்லாதிருந்தால் என்ன செய்ய முடியும்? தமிழாசிரியர் சங்கம் என்ற பெயரையே நாம் முதலில் மாற்றியமைக்க வேண்டும். சங்கம் என்பது வட சொல் அல்லவா? கழகம் என்ற அழகிய தமிழ்ச் சொல்லிருக்கும்பொழுது நாம் அதனையேன் விட்டு விடவேண்டும்? தமிழாசிரியர் என்பதற்குப் பதில் தமிழ்ப் புலவர்கள் என்று இருக்கலாம். தமிழ்ப் புலவர் கழகம் என்று இருக்கலாமே! சம்பளத்தைப்பற்றிப் பிறகுகூட நாம் கவனித்துக்கொள்ளலாம். அடுத்தாற்போலவே ஒரு கூட்டம் கூட்டிப் பெயரை எப்படியமைப்பது என்பதுபற்றி ஆலோசித்து முடிவு செய்தாகவேண்டும்.

விட்டுக்கொடுத்துக்கொண்டே போனால் ஒன்றும் நடக்காது. இதற்காகச் செயலாளர் அடுத்த கூட்டம் எப்பொழுது போடப்போகிறார் என்பதையும் இந்தக் கூட்டத்திலேயே தெரிவித்துவிட்டாரானால் நன்றாக இருக்கும் என்று சொல்லிவிட்டு நிறுத்தாமலேயே பிற பாஷைகளால் தமிழுக்கு உண்டாகும் தீங்குகளை வரிசை வரிசையாக விளக்க ஆரம்பித்துவிட்டார் மணியாகின்றதைப்பற்றிய கவலையே இல்லாமல்.

போதும் அப்பா போதும்! மணி 9 ஆகின்றது. சம்பளச் சண்டை போய், பெயர் மாற்றச் சண்டை வந்து, இப்பொழுது பாஷைச் சண்டை நடக்கிறது. இன்னும் என்னென்ன நடக்குமோ? எப்பொழுது முடியுமோ? நாம் போகலாமென்று எழுந்தார் கோதண்டராமன் M.A., L.T.

நடுத்தரமானவர் கல்வி

இப்பொழுது பண்டிதர் உலகமே மிகவும் திருந்தி யிருக்கிறது சார். முன்மாதிரி அவ்வளவு மோசமில்லே. இப்பொழுது வருகின்றவர்களெல்லோரும் இங்கிலீஷ் படித்தவர்களாக வருகின்றார்கள். அதோடு இங்கிலீஷ் வாத்தியார்களைப் போலவே சூட்டெல்லாம் போட்டுக்கொண்டு வருகின்றார்கள். தலைப்பாகை, கிழிந்தகோட்டு இவை யெல்லாம் இப்பொழுது பறந்து போய்விட்டன. இங்கிலீஷ் வாத்தியார்களுக்கும் அவர்களுக்கும் இப்பொழுது வித்தியாசமே தெரிவதில்லே. இப்பொழுது பரவாயில்லே சார். முன்னுக்கு இப்பொழுது எவ்வளவோ தேவலாம் என்று சந்தோஷப்பட்டார் நடேசம் பிள்ளை நண்பர் முருகேசனிடத்தில்.

"என்ன சார் தேவலாம்! ஒரே பொறுமை. ஒற்றுமை என்பதே கிடையாது. என்ன இவர்கள் ஆங்கிலம் படித்துவிட்டார்கள்!" என்று சொல்லி அலுப்படைந்தார் தலைமையாசிரியர் முருகேசம்.

அப்படிச் சொல்லாதீர்கள் சார்! முந்தி யிருந்தவர்களுக்குச் சர்க்குலர்கூட அல்லவா படிக்கத் தெரிவதில்லே. ஒரு நாள் பாருங்கள் நான் V form படித்துக் கொண்டிருந்த சமயம். தமிழ் வகுப்புகளில் ஏதாவது சர்க்குலர் வந்தால் பையன்கள்தான் படித்துச் சொல்ல வேண்டும். மாணவர்களுக்கு மட்டுந்தானே அது புரியும்! அதைத் தமிழ்ப்படுத்திவேறு சொல்லியாக வேண்டும். சர்க்குலர் வந்தாலே போதும்; பையன்களுக்கு ஒரே குதூகலந்தான்.

ஏதோ சனியன் வந்திருக்கிறதே; படித்துத் தொலேயுங்களேன் இதை என்பார் தமிழ் வாத்தியார். தமிழ்ப்படுத்திச் சொன்னால், "இந்த விஷயம் அவசியம் நடந்துதான் ஆகவேண்டும் போலிருக்கிறது, இதற்கொரு சர்க்குலரா ?" என்று சொல்லிக்கொண்டே கையெழுத்துப் போடுவார்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் மாணவர்கள் முன்கூட்டியே யோசனை செய்து அதன்படியே நடந்துகொள்வார்கள். 10 அல்லது 15 நிமிஷங்கள் ஆகும் சர்க்குலர் எங்கள் வகுப்பைவிட்டுப் போவதற்கு. ஆங்கிலமும் எங்களுக்கு அதிகமாகத் தெரியாது. இருந்தாலும் அந்தப் பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்குள்ளே ஆங்கிலத்தைச் சரமாரியாகப் பொழிந்துவிடுவோம். பற பாஷை சார் இது. இதில் இரண்டெழுத்துகள் தெரிந்துகொண்டதுமே இவர்கள் இப்படிச்-

குதிக்கிறார்களே சார் என்று கிண்டல் வேறு புறப்படும். இந்தச் சமயங்களிலெல்லாம் தமிழ் வாத்தியார் கொஞ்சம் அசட்டுச் சிரிப்போடு தான் இருப்பார். ஒரு நாள் சர்க்குலர் ஒன்று வந்தது. ஆங்கிலத்தை அப்படியே படித்தேன். இரண்டாவது தரமும் அவருக்காகப்படித்துத் தமிழ்ப்படுத்திச் சொன்னேன். மாணவர்கள் எல்லோருக்குமே தெரியும் அவருக்காகத்தான் நான் இப்படிச் சொல்லுகின்றேன் என்று. என்ன சொன்னேன்! மத்தியானம் நம் பள்ளிக்கூடத்தில் கிரிக்கெட் பந்தயம் நடக்கப் போவதால் இன்று மாலை பள்ளிக்கூடம் இல்லை என்பதுதான்.

"ஓகோ இன்றைக்கு இல்லையாப்பா! நல்லது. யாரும் உண்மையைச் சொல்லவில்லை. என்று கூறி," காலைப் பள்ளிக்கூடம் முடிந்தவுடனே நேரே வீட்டிற்குச் சென்றார் தமிழ் வாத்தியார். அவர் திரும்பி வருவாரா? நன்றாகஉறங்கினர் பாவம்.

மத்தியானம் அவர் எடுக்கவேண்டிய வகுப்புகளும் இருந்தன. தலைமையாசிரியர் எங்கே தமிழ் ஐயா? எங்கே தமிழ் ஐயா? என்று சுற்றிச் சுற்றி வந்தார். பள்ளிக்கூடத்தில் ஏன் அவர் இருப்பார்? வீட்டிற்கு வேலையாளையனுப்பித் தூங்கிக்கொண்டிருந்தவரைத் தட்டியெழுப்பிக் கேட்ட பிறகுதான் தெரிந்தது உண்மை; எனக்கு அதற்காக அபராதம்கூடப் போட்டார்கள். நான் மிகுந்த சந்தோஷத்தோடுதான் அதை ஏற்றுக்கொண்டேன். இப்பொழுது இருக்கின்றவர்கள் இவ்வளவு மோசமா என்ன?

மோசமில்லையாவது ஒன்றாவது சார்! முந்தியிருந்தவர்கள் இங்கிலீஷ் தெரியாது தங்களுக்கு என்பதை ஒத்துக்கொண்டார்கள். இப்பொழுது இருப்பவர்களோ தமிழ் சொல்லிக்கொடுப்பதற்கு இங்கிலீஷ் எதற்கென்று கேட்கிறார்கள். சர்க்குலர் வந்தால் மட்டும் என்ன? உங்களுக்கு ஒன்றும் சம்பந்தமில்லையென்று பையன்களிடம் சொல்லிவிட்டுப் பிறகு வாத்தியார்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறார்கள். பழைய தமிழ் வாத்தியார்களை வைத்துக்கொண்டும் நான் வேலை வாங்கியிருக்கின்றேன். அவர்களுடைய தமிழ்ப் படிப்பு அபாரப் படிப்புதான். இப்பொழுதுள்ள தமிழ் வாத்தியார்களெல்லோரும் உரைப்புஸ்தகங்களைப் படித்துவிட்டுத்தானே வந்து பாடம் சொல்லுகிறார்கள். எல்லோருடைய வீடுகளிலும் உரைப்புஸ்தகங்கள் (notes) இருக்கும். ஆனால் ஒவ்வொருவரும் தங்களிடம் இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். இதை அவர்களிடத்தில் கனவிலும் காணமுடியாதோ?

ஆமாம்; அதை நானும் ஒத்துக்கொள்ளுகின்றேன்.

இந்த இரண்டு பேருடைய கருத்திற்கும் விதிவிலக்கு நான். முருகேசம் பிள்ளையின் தலைமையில்தான் நான் தமிழாசிரியராக இருக்கின்றேன். நான்தான் தலைமைத் தமிழாசிரியர்; எனக்குக் கீழே இரண்டு பேர் வேலை செய்கிறார்கள். அவர்கள் பேசிக்கொண்டதெல்லாம் என்னைக் குறித்தது அல்ல என்பதைமட்டும் நான் உறுதியாகச் சொல்ல முடியும். பரம்பரைக் கவிராயர் பாலசுப்பிரமணியத்திடந்தான் நான் பாடம் கேட்டேன். இலக்கணச் சூறாவளி இராமசாமி தான் எனது இலக்கண ஆசிரியர். வித்துவான் பட்டத்தை வெகு சீக்கிரத்தில் வாங்கிவிட்டேன். பெருமைக்காகச் சொல்லுகின்றேன் என்று நினைக்காதீர்கள். நான் பார்க்காத தமிழ் நூல்கள் ஒன்றுமில்லை. மறைசையந்தாதி பாடம் கேட்பதற்கு என்ன கஷ்டப்பட்டிருப்பேன் தெரியுமா? திருச்செந்தில் நீரோட்டக யமக அந்தாதி. அப்பா! என்ன பாட்டுகள்! ஒரே நாளில் பாடம் கேட்டு முடித்தேன். ஆங்கிலத்திலும் அப்படித்தான். பட்டங்களும் இதில் வாங்கியிருக்கின்றேன். இங்கிலீஷ் இருந்தாலும் போதாது. பாடம் நன்றாகச் சொல்லவேண்டும். பாடம் நன்றாகச் சொல்ல முடியாவிட்டால் படித்து என்ன பயன்? அதற்காகத்தான் பள்ளிக்கூடத்திற்கு வருகின்ற அதிகாரிகள் எல்லோரும் Training வேண்டும் என்று தலையிலடித்துக்கொள்ளுகிறார்கள். இதைச் சொன்னால் இந்தத் தமிழ் வாத்தியார்களுக்குக் கோபம் வருகின்றது. பல விஷயங்களை நான் தமிழிலேயே விளக்குவேன். சரியாக விளங்கவில்லையென்று சொன்னார்களானால் இங்கிலீஷிலே அதை நன்றாக விளக்குவேன். இங்கிலீஷ் நன்றாகத் தெரிந்த பாஷை பாருங்கள்! அப்படியெல்லாம் விளக்கினால்தானே நம்மிடத்தில் பையன்களுக்கு மதிப்பு ஏற்படும்! ஆங்கிலத்திலே உள்ள கருத்துகளையும் அடிக்கடி எடுத்துச்சொல்ல வேண்டும். வெறும் தமிழில் உள்ள மேற்கோள்கள், அவையும் பாட்டுகளாகவே இருந்தால் எப்படி மாணவர்கள்தான் கேட்பார்கள்! நமக்கே வெறுப்பாக இல்லையா? நான் வித்துவான் பாஸ் பண்ணியதோடு B.O.L. பாஸ் பண்ணியிருக்கிறேன். L.T. சம்பளம் கொடுப்பதென்று முடிவு செய்துவிட்டார்களாம். பாக்கியிருக்கின்றவர்கள் தங்களுக்கும் L.T. சம்பளம் வேண்டுமென்று கேட்கின்றார்கள். நடக்குமா என்ன?

இதோடுமட்டும் விட்டால் போதுமே! எஸ். எஸ். எல். சி. வகுப்பு தங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று தலைமையாசிரியரோடு சண்டைக்கு நிற்கிறார்கள். ஐந்தாம் பாரம் தாங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பொழுது 6-ம் பாரம் தாங்கள் ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று வாதம் செய்கிறார்கள். ஆங்கிலப்

புலவர்கள் சம்பந்தமாக, அல்லது வேறு ஏதாவது பாட புத்தகத்தில் வந்துவிட்டால் அதை விளக்கவேண்டுமே! இதை மனத்தில் வைத்துக்கொண்டுதான் 6-ம் பாரம் தலைமையாசிரியர்கள் அவர்களுக்குக் கொடுப்பதில்லை. என்னைக் கேட்டால் நான் கொடுங்கள் என்று சொல்வது. அவர் கொடுப்பதில்லை. 6-வது பாரம் தமக்குக் கொடுக்கவில்லை யென்பதற்காக வேலையை விட்டுப்போய்விட்டார் ஒருவர். இதைவிட மோசம் வேறு என்ன வேண்டும்?

நான் இவ்வளவு படித்திருப்பதற்கு வீட்டிலுள்ளவர்கள் எல்லோரும் படித்தவர்களாக இருந்தால் குடும்பம் எப்படியிருக்கும்? யாரும் படிக்காவிட்டாலும் என் மனைவியாவது படித்தவளாக இருக்கக்கூடாதா? வாத்தியார் தொழிலிலே நான் புகுந்து இரண்டொரு வருஷங்கள்தான் ஆகின்றன. குடும்பம் செய்ய ஆரம்பித்ததோ சில மாதங்களுக்கு முன்னிருந்துதான். வாத்தியார் உத்தியோகத்திற்குப் போன இரண்டொரு வருஷங்கள் வரை அதில் நிறைய உற்சாகம் இருக்கும். பிறகு, எல்லாம் பார்த்து எழுதுங்கள் என்று சொல்லுவதைத் தவிர வேறு இருக்காது. எனக்குமட்டும் இது விலக்கா என்ன? பள்ளிக்கூடத்திலே வாத்தியாராக இருப்பதோடு வீட்டிலும் உபாத்தியாயராக இருக்கலாமே என்று நினைத்தேன். வீட்டிலே யாருமில்லை எனது மனைவியைத் தவிர. அவளையே மாணவியாக வைத்துக் கொண்டு ஆசிரியராக ஆகிவிடுவது என்று முடிவு செய்தேன். உத்தியோகம் இரண்டு இடங்களில்; சம்பளம்மட்டும் ஓர் இடத்தில்தான். உற்சாகமும் ஒரே இடத்தில்தான். சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பள்ளிக்கூடங்களும், பாடத்திட்டங்களும் இருக்கின்றன. முதியவர்களுக்கும் கல்வித் திட்டம் இப்பொழுது வகுக்கப்படுகின்றது. நடுத்தரமானவர்களுக்கு ஒன்றுந் திட்டத்தைக் காணவில்லை. அவர்களுக்குக் கல்வி அவசியம் இல்லை; ஆகையால்தான் திட்டம் போடவில்லை யென்று யாராவது சொல்ல முன்வருவார்களானால் நான் அதைப் பலமாக ஆட்சேபிப்பேன் என்பதையும் முன் கூட்டியே தெரிவித்துவிடுகிறேன். நாம்தான் இந்தத் திட்டத்தைத் தயார் செய்யவேண்டும் இதில் முந்திக்கொள்ள வேண்டியது நாம்தான். நடுத்தரமானவர்களுக்குக் கல்வி அவசியம் - அதற்கொரு திட்டம் வேண்டும் என்ற எண்ணமே யாருக்காவது தோன்றியிருக்குமா என்பது சந்தேகந்தான்.

கல்வியினுடைய அவசியத்தை அவளிடம் விளக்கமாகக் கதை மூலமாகச் சொன்னேன்.

அது சரிதான்; வாத்தியார் வேண்டுமே!

நீ அதைப்பற்றி ஏன் கவலைப்படுகிறாய்? நான் கொண்டு வருகின்றேன்.

"அன்னை தயையும் அடியாள்பணியும் மலர்ப்
பொன்னின் அழகும் புவிப்பொறையும்—வன்னமலர்
வேசி துயிலும் விறல்மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்"

என்று பாடினனே ஒருவன்; மாணவியாகவும் இருப்பவள்தான் பெண் என்று ஏன் பாடியிருக்கக்கூடாது? பொருத்தமில்லாத ஒன்றை எடுத்துவிட்டு இதைச் சேர்த்து விட்டால் போகின்றது. எத்தனையோபேர்களுக்கு எடுக்கவேண்டியதும், சேர்க்கவேண்டியதும் இந்தப் பாட்டில் எத்தனையோ இருக்கலாம். என்னைப் பொறுத்த அளவில் எடுக்கவேண்டியதைச் சொல்லிவிடுகிறேன். "மலர்ப் பொன்னின் அழகும்" என்று இருக்கின்றதே, அதைத் தயவுசெய்து எடுத்து விடுங்கள்!

நான் நடத்தும் பள்ளிக்கூடம் இருக்கின்றதே அது இரவு 6 மணிக்குத் தொடங்கும்; 8 மணிக்கு முடியும். சிறுவர்களுக்குப் பகலில் பள்ளிக்கூடம் நடக்கின்றது. முதியவர்களுக்கு இரவில் நடக்கின்றது. நடுத்தரமானவர்களுக்கு இப்படியிருக்கட்டுமே என்று வைத்தேன். திட்டம் போட்டால் நடைமுறையில் கொண்டு வருவதாக இருக்கவேண்டுமல்லவா?

இப்பொழுதிருக்கின்ற பள்ளிக்கூடங்களிலெல்லாம் மாணவர்களை வாத்தியார் பள்ளிக்கூடத்திற்கு வாருங்கள் என்று கூப்பிட வேண்டிய துன்பம் இருப்பதில்லை. ஆனால், இதில் ஆசிரியர்தான் கூப்பிட்டாக வேண்டும். நான்தான் அவளை வேண்டி வேண்டிக் கூப்பிடுவேன். சமையல் நடக்கவேண்டிய சமயமும் அதுதான். இரண்டையும் எப்படியோ அவள் சமாளித்துக் கொள்ளுகிறாள். முதலில் எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்கத் தொடங்கினேன். அது முடிவதற்குள் போதும் என்றாகிவிட்டது அவளுக்கு. உட்கார்ந்தல்லவா எழுதியாகவேண்டும்! சில நாட்களில் "இன்றைக்கு உடம்பு சௌக்கியமாக இல்லை; ஆகையால் இன்றைக்கு லீவு வேண்டு"மென்பாள். சரியென்று கொடுத்துவிடுவேன். உடம்பு சௌகரியமில்லாதிருந்தால்தான் லீவு எடுக்கலாமேயொழிய வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டும் லீவு எடுக்கக்கூடாது என்பது இந்தப் பள்ளிக்கூடத்தின் சட்டம்.

எழுத்துக்களெல்லாம் கற்றுக்கொண்டதாகச் சொல்லுகின்றாயே! சரியாகத் தெரிகின்றதா என்று நானே பார்க்கின்றேன் என்-

றேன். அடுத்த நாள் வழக்கம் போலப் படிப்பதற்குக் கூப்பிட்டேன். ஒரு சிறு பாத்திரத்தில் சீடை உருண்டைகளைப் போட்டுக்கொண்டு வந்து பக்கத்தில்வைத்துவிட்டுத் தேங்காய் அதிகமாகப் போட்டிருக்கின்றேன் சாப்பிடுங்கள் என்று சொன்னாள். தன்னுடைய அம்மா பலகாரம் செய்தால் எப்படியிருக்கும், பாட்டி பலகாரம் செய்தால் எப்படியிருக்கும், பாட்டி பலகாரம் செய்து கொடுக்க, நீங்கள் சாப்பிடும் பாக்கியம் உங்களுக்கில்லை என்பதற்கு அநுதாபம் முதலிய கதைகளைச் சொல்ல ஆரம்பித்தாள். நான் பள்ளிக் கூடத்தையே மறந்துவிட்டேன். நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! இந்தத் திட்டத்தில் இந்தக் கட்டம் திருத்தம் பெற வேண்டிய இடம். மணி 8 ஆகிவிட்டது; பள்ளிக் கூடம் முடிந்து விட்டது என்று சொல்லி எழுந்து போய்விட்டாள்.

எழுத்துக்களெல்லாம் ஒருவாறு இப்பொழுது அவளுக்குத் தெரியும். அடுத்தாற்போல எழுத்துக்களைச் சேர்த்துப் படிக்கவும் சொல்லிக் கொடுத்தேன். எழுத்துக் கூட்டிப் படிக்கின்ற பழக்கம் அவளுக்கு உண்டாவதற்காக எனக்கு என்ன வேண்டுமோ அதைக் கடிதத்தில் எழுதி மேஜைமேல் போடுவேன். அதை அவள் பார்த்துப் படித்து அதைக் கொண்டுவர வேண்டும். ஆனால் தாமதிதான் ஆகும். பொறுமையே ஆசிரியர்க்குப் பூஷணம் என்பதையும் இங்கே நினைவுப் படுத்துகின்றேன். அச்செழுத்தாக இருந்தாலே ஒரு வார்த்தை படிப்பதற்கு அரைமணி பிடிக்கும் அவளுக்கு. என்எழுத்தோ மிக மோசம். ஒரு நாள் வெயிலிலே அலைந்துவிட்டு வீடு வந்து சேர்ந்தேன். பென்சிலை எடுத்து ஒரு துண்டுக் கடிதத்தில் எழுதி மேஜைமேல் போட்டேன். அதை ஓர் ஐந்து நிமிஷம் தடவித் தடவிப் பார்த்து விட்டு மண் என்றாள். எனக்கு இருந்த கோபத்தில், "அள்ளித் தலையிலே போடு" என்றேன்.

உங்கள் எழுத்து எனக்குப் புரியவே இல்லை என்று சொல்லி விட்டுக் கண் என்று படித்துக் கண்ணாடிக் கூடு வேண்டுமா கண்ணாடி வைப்பதற்கு என்று சொல்லிவிட்டுக் கண்ணாடிக் கூட்டை எடுத்துக் கொண்டு வந்து கையில் கொடுத்தாள். வெயிலிலே அலைந்துவந்த எனக்குத் தாகமோ பொறுக்க முடியவில்லை. "நீ படித்து வாழ்ந்தது போதும்; தண்ணீர் கொண்டுவா!'' என்றேன். பெண் கல்வி பிரயோஜனமில்லாத கல்விதான்போல் இருக்கின்றது.

இதற்குப் பிறகெல்லாம் சாவதான வேளையில் எதுவும் வேண்டுமானால் எழுதிப்போடுவேன். இல்லையானால் ஆபத்து எனக்குத்தான். வாத்தியாருக்குத்தான் இந்தத் திட்டத்தில் வேலை அதிகம். கஷ்டம்

மிக உண்டு. ஒருவகையாகக் கூட்டிப் படிக்கவும் கற்றுக்கொண்டாள் இப்பொழுது. அடுத்தாற்போல வாக்கியம் எழுதக் கற்றுக்கொடுத்தேன். சரியாக எழுதச் சொல்லவேண்டுமே, அதற்காகக் கணவன் மனைவிக்குக் கடிதம் எழுதுவதுபோலவும், மனைவி கணவனுக்குக் கடிதம் எழுதுவதுபோலவும் கடிதங்கள் எழுது என்றேன். கடிதம் எழுதுவதிலே அவளுக்கு மிகுந்த உற்சாகம். அதுவும் கணவனுக்கு என்றால் யாருக்குத்தான் இருக்காது. தனக்கு வேண்டிய எல்லாவற்றையும் கடிதத்திலே எழுதிவிடுவாள். திட்டமாகப் புரியுமாறு இருக்காது. கடமை என்று புடவைக்குப் பதில் எழுதியிருப்பாள். அவளையும் பக்கத்தில் வைத்துக் கொண்டே கேட்டுத் தெரிந்துகொள்வது. முதலில் தன்னுடைய பெயரை எழுதக்கற்றுக்கொண்டாள். முதலில் லட்சுமி ஆக இருந்தது. இப்பொழுது தான் லட்சுமியாக இருக்கின்றது. ல, மொழிக்கு முதலில் வராது; இலட்சுமி என்று எழுது என்று எத்தனையோதடவைகள் சொல்லியிருப்பேன். ஆனால் அந்த அசடு கேட்பதில்லை.

நீ ஒருவேளை ஊருக்குப் போயிருந்தால், வேண்டுமானால் எனக்குக் கடிதம் எழுதலாம்; ஆகையால், என் பெயரையும் எழுதத்தெரிந்துகொள் என்று சொல்லி கடிதத்தில் என் பெயரை எழுதி, பார்த்து எழுது என்று சொல்லிக்கொடுத்தேன். நன்றாக இருக்கின்றது, உங்கள் பெயரை நான் எழுதுவதற்காகவா நான் படித்தேன், அந்தப் பாவம் எனக்கு வேண்டாம் என்று தீர்மானமாகச் சொல்லிவிடுகிறாள். நடுத்தரமானவர்கல்வியில் இந்த அளவுதான் இதுவரை நடந்தது. இதுவரையில் வெற்றிதான். இனிமேல் அவளுக்கு எந்தெந்தப் புஸ்தகங்களைப் படிக்கக் கொடுக்கலாம் என்பதுபற்றி யோசனை செய்துகொண்டிருக்கின்றேன். நடுத்தரமானவர்களுக்குக் கல்வி கற்பிப்பது என்ற எண்ணமே எனக்குத்தான் முதலில் தோன்றிற்று. திட்டம் வகுத்தவனும் நானே. ஆகையால் உரிமை என்னுடையதே.

"சங்கத் தமிழ் மூன்றும் தா"

வாத்தியார்கள் யாரும் கோபித்துக்கொள்ள மாட்டார்களென்று நினைக்கின்றேன். பழையகாலத்தி லிருந்தவர்களைப் பற்றித்தானே நான் சொல்லப் போகின்றேன். ஒவ்வொரு வாத்தியாரும் ஒவ்வொரு ஹிட்லர்தான். அந்தக் கிராமம் முழுவதும் அவருக்கு என்ன மதிப்புக் கொடுத்து வந்தது! வாத்தியார் வெளியே புறப்படுகிறாரென்றால் தெருவில் ஒரு பையன் இருக்கமுடியுமா? என்னென்ன தண்டனைகள் அவர் கொடுப்பார் தெரியுமா? தான் வந்தபொழுது தெருவில் இருந்ததற்காக அல்ல. நேராக இதைச் சொல்லித் தண்டனை கொடுப்பதில்லை. வேறு சந்தர்ப்பங்கள் வரும்பொழுது இதுவும் அதோடு சேரும்.

"கொக்குப் பிடிப்பது" என்பதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? காக்காய் பிடிப்பது என்று சொல்லுகின்றார்களே அதற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. வெண்ணெயைத் தலையில் வைத்துக் கொக்குப் பிடிப்பது என்று சொல்லுகின்றார்களே அதுவும் அல்லவே அல்ல. பழைய வாத்தியார்கள் மாணவர்களுக்குக் கொடுத்துவந்த தண்டனை வகைகளுள் இது ஒன்று. வாத்தியார் புறப்பட்டால் தெருவில் பையன் நிற்பான் என்று நினைக்கின்றீர்களா? கொக்குப் பிடித்தாகவேண்டுமே. தலையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு வெயிலில் நின்று கொக்குப் பிடிப்பதைத்தான் இப்படி வழங்கி வருகிறார்களோ என்னவோ! அப்பா! நினைத்தாலே மனம் பட பட வென்று அடித்துக் கொள்ளுகின்றதே!

ஊரிலே நடக்கின்ற கலியாணங்களுக்கெல்லாம் நாள் பார்க்கின்றவர் அவர்தான். ஒவ்வொரு வீட்டு விவகாரமும் அவருக்குத் தெரியும். வழக்குகளையெல்லாம் விசாரித்து நீதி சொல்பவராகவும் அவர் இருப்பார். வேறு சொல்வானேன். 'நீயூஸ் பீரோ' என்று இந்தக்காலத்தில் சொல்லுகின்றார்களே, அவர்தான் அந்தக்காலத்தில். பெண்ணை அழைத்து வருவதாயிருந்தாலும் ஊருக்குப் போகச்சொல்லுவதாக இருந்தாலும் அவருடைய புத்திமதியின்பேரில்தான் நடக்கும். எதுவும் விற்பதோ வாங்குவதோ அவரறியாமல் நடக்க வழியில்லை. பத்திரம் எழுதுபவர் அவரைத்தவிர வேறு யாரும் இல்லை

அந்த ஊரில். நிச்சயமாக அவருக்கு ஜோசியம் சொல்லத் தெரிந்திருக்கும். ரேகை சாஸ்திரமும் அவர் அறியாததல்ல. சகலகலாவல்லவர் அவர்தான் அந்த ஊருக்கு.

இவ்வளவு படித்தவர்களுக்கு ஏதாவது குறைவு இருக்குமா? ஊரில் விற்கின்ற காய்கறிகளெல்லாம் அவருக்குச் சொந்தந்தான். அவர் கேட்கவேண்டுமென்பதுகூட இல்லை. போகின்ற பொழுதே கையிலிருக்கின்ற காய்கறிகளில் கொஞ்சம் எல்லோரும் போட்டுவிட்டுப் போவது வழக்கம். பால் மோருக்குக் கவலையே இல்லை. சுகபோகமாக வாழ்வதற்கு யாரைக் கேட்கவேண்டும். எப்பொழுதும் இப்படியே வண்டி ஓடுமா? இக்காலத்தில் அவர்கள் அதற்காகத்தான் பழிக்குப்பழி வாங்கப்படுகிறார்கள். யார் அவர்களை இந்தக்காலத்தில் கவனிக்கிறார்கள்? 'வேறு வேலையில்லாதவன் வாத்தியார் வேலைக்குப் போ' என்பது பழமொழியாகக்கூட ஆகிவிட்டதே!

அந்த வாத்தியாரை என்னால் மறக்க முடியவில்லை. நான் செய்ததும் அநியாயம்தான். அவருக்குத்தான் என்ன அவ்வளவு தைரியம்? ஊருக்குப் புதிதாயிற்றே என்று இல்லாமல் அவர் ஏன் அப்படி நடந்துகொள்ளவேண்டும்? அவர் என்னுடைய ஊருக்குப் பக்கத்திலே ஓடுகின்ற ஆற்றிலே மிதந்து வந்தாராம். பாவம் எங்கேயோ ஊருக்குப் போவதற்காக வந்தவர் அசட்டுத் தைரியத்தினாலே தண்ணீரிலே இறங்கி நடக்க ஆரம்பித்தார். புதுவெள்ளமாயிற்றே, கடலை நோக்கிப் புறப்பட்டார். ஓவென்று அலறிக்கொண்டே வந்திருப்பார் வழி நீள. யார் இதைக் கவனித்திருப்பார்கள். அவருடைய நல்லகாலந்தான் அது. ஆற்றங்கரையோரமாக நின்றுகொண்டிருந்த எனது அண்ணன் அவருடைய அலறுதலைக் கேட்டு ஆற்றில் குதித்து அவரைக் கரையேற்றினார். கரையேற்றினவுடனே கரைமேலே திடீர் என்று விழுந்துவிட்டாராம். பல மைல்கள் தண்ணீரிலேயே பிரயாணம் செய்தாரே. வீட்டிற்கு எனது அண்ணன் அவரை யழைத்துக்கொண்டு வந்தார். அவருக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து கொடுத்தோம். அவர் ஒரு வாத்தியார் என்றும் மாமனார் வீட்டிற்குப் போனவழியில் இந்த நிலைமை ஏற்பட்டதென்றும் அவரைக் கேட்டுத் தெரிந்துகொண்டோம். நன்றாகப் படித்தவர்தான்.

என்னுடைய அண்ணன்தான் எங்களூர் நாட்டார். எங்கள் வீட்டிற்கே நாட்டார் வீடு என்றுதான் பெயர். இந்த வாத்தியாரைப்பற்றி அண்ணனுக்குநல்ல எண்ணம் உண்டாயிற்று. அவரைஎப்

படியாவது தங்கள் ஊரில் வாத்தியாராக வைத்துக்கொள்ளவேண்டு-மென்று நினைத்தார். நெடுநாளாக எங்கள் ஊரில் வாத்தியாராக இருந்த ஒருவர் இறந்து ஒரு வருஷம் ஆகின்றது; ஊரில் பள்ளிக்-கூடமே இல்லை. சிறு பையன்களெல்லோரும் அயலூருக்குச் சென்று படிக்கவேண்டி யிருந்தது. "இதை எப்படியாவது போக்கு தம்பி'' என்று ஊராரெல்லோரும் எனது அண்ணனிடத்தில் புகார் செய்து கொண்டிருந்த காலம் அது. புதிய வாத்தியாரிடத்தில் தனது எண்ணத்தை அண்ணன் சொல்லவே அவரும் ஒத்துக் கொண்டார். வீடு ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு நெல், ரூபாய் கொடுப்பது என்பதைப்பற்றியும் முடிவுசெய்து விட்டார்கள். வாத்தி-யார் ஊருக்குப் போய்வந்தபிறகு பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது என்று ஒரு நல்ல நாளையும் பார்த்து வைத்தார்கள். திண்ணையிலேதான் அந்தப் பள்ளிக்கூடம் தொடங்கிற்று. பையன்களும் நாளுக்குநாள் பெருக ஆரம்பித்தார்கள். அயலூரிலிருந்து வந்தும் பையன்கள் அங்கே படித்தார்கள். வாத்தியாருக்கும் வரும்படி அதிகமாயிற்று. பழைய வாத்தியாரில் பாதி வாத்தியாராக ஆகிவிட்டார் இவரும்.

அதை நினைத்தாலே சிரிப்புத்தான் வருகின்றது. பள்ளிக்-கூடம் தொடங்கும்பொழுதும் முடியும்பொழுதும் கடவுள் வணக்-கம் பாடுவது வழக்கம். விநாயகர் வணக்கம்தான் எங்கள் பள்ளிக்-கூடத்திற்குரிய பாட்டு. உங்களுக்கு அந்தப் பாட்டு தெரியுமோ என்ன வோ! திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படித்திருந்தீர்களானால் நிச்ச-யம் தெரிந்திருக்கும். இல்லாவிட்டாலும் தெரிந்திருக்கலாம்.

> "பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
> நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
> துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்கு
> சங்கத் தமிழ் மூன்றும் தா."

இந்தப் பாட்டுதான். நெடுநாள்வரையிலும் பிள்ளையார் வணக்-கம் மட்டுந்தான் நடந்துவந்தது. பிறகு குரு வணக்கமும் ஆரம்பிக் கப்பட்டது. மாதா, பிதா, குரு தெய்வங்களல்லவா! அந்த வாத்-தியாருக்குக் குரு வணக்கத்திற்கு ஒன்றும் பாட்டு அகப்படவில்லை. குரு வணக்கம் இல்லாது இருப்பதும் நல்லதாகத் தோன்றவில்லை அவருக்கு. புதிதாகப் பாட்டு கட்டுவதற்கும் அவரால் முடியவில்லை. மேலே சொன்னேனே அந்தப் பாட்டிலேயே சில திருத்தங்கள் செய்து குரு வணக்கமாக அதையே ஆக்கிக் கொண்டார். முதலில் விநாயகர் வணக்கம். பிறகு குரு வணக்கம். பள்ளிக்கூடம்

தொடங்கும்பொழுதும் முடியும்பொழுதும் விடாது நடக்கும். அர்த்தம் தெரிந்தாலும் சரி, தெரியாவிட்டாலும் சரி பாடியாக வேண்டும்.

> "பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
> நாலும் கலந்துனக்கு நான்தருவேன் மேலும்
> திங்களுக்குத் திங்கள் செலவிற்குப் பொன்தருவேன்
> சங்கத் தமிழ்மூன்றுந் தா." —(திங்கள்—மாதம்)

இது குரு வணக்கப் பாட்டு. எனக்கு இந்தப் பாட்டு நீண்ட நாளாக மனப்பாடம் ஆகவில்லை. பாடாது இருந்தாலோ வெயிலிலே நின்று கொக்குப் பிடிக்கவேண்டும். ஒருநாள் இரவு நான் இந்தப் பாட்டை மனப்பாடம் செய்துகொண்டிருந்தேன். சாப்பிட்டு வெளியே போய்க்கொண்டிருந்த அண்ணன் இதைக் கவனித்தார். சிரித்துக்கொண்டே "என்ன பாட்டுடா இது! கோலம்செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச் சங்கத் தமிழ்மூன்றுந் தா என்று படிடா" என்றார்.

இல்லை; இல்லை. நீ சொல்லுவது விநாயகர் வணக்கம்; இது குரு வணக்கம்; எங்கள் வாத்தியார் இப்படித்தான் எழுதிக்-கொடுத்தார். என்றேன்

இந்த வாத்தியாருக்கு இவ்வளவு தெரியுமா என்று அவர் நினைத்திருப்பார். எனது அண்ணன் தமிழ் கொஞ்சம் படித்தவர்கூட. கம்பராமாயணக் கவிராயரிடத்திலே பாடம்கூடக் கேட்டிருக்கிறார். அடுத்த வீட்டு இராமசாமிப் பிள்ளையிடம் இராமாயணத்தில் இரண்டொரு பாட்டுக்களைச் சொல்லி வியாக்யானமும் செய்வதுண்டு.

நான் ஒரு பாட்டு சொல்லித் தருகின்றேன்; அதை மனப் பாடம் செய்துகொண்டு அதைக் குருவணக்கமாகப் பாடு என்றார். கஷ்டகால மென்று சொல்லி அதையும் எழுதிக்கொண்டேன். எல்லோரும் குரு வணக்கத்தில் அந்தப் பாட்டைப் பாடினால் நான் இந்தப் பாட்டைப் பாட வேண்டுமென்று உத்தரவும் இட்டார். மனப்பாடம் செய்வது சாதாரண காரியமா? எப்படியோ மனப் பாடம் செய்து தொலைத்தேன்.

எங்களூர் இருக்கின்றதே அது இடையர்கள் அதிகமாக இருக்-கின்ற ஊர். பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற மாணவர்களெல்லோரும் அவர்கள்தான். போகின்ற பொழுதெல்லாம் அவர்கள் என்னைக் கூப்பிட்டுக்கொண்டுதான் போவார்கள். பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தோம்.

முதலில் விநாயகர் வணக்கம் நடந்தது. குரு வணக்கம் தொடங்கிற்று. எல்லோரும் சேர்ந்து குரு வணக்கம் பாடினோம். நான் பாடியது அவருக்கு எப்படிப் பட்டதோ; எல்லோரையும் உட்காரச் சொல்லிவிட்டு என்னை மட்டும் நிற்கச் சொல்லி, சொல்லு அந்தக் குரு வணக்கப் பாட்டை என்றார். அப்பொழுது இந்தப் பாட்டுகள் ஒன்றிற்காவது எனக்கு அர்த்தம் தெரியாது; ஆகையால் நான் ஏன் பயப்படுகிறேன்; சொல்ல ஆரம்பித்தேன்.

பாலுண்டு பழமில்லை பருப்பில்லை நெய்யுண்டு
மேலும் அவை எங்களுக்கு வேண்டாவோ—சால
கங்கையிலே போன உனைக் கைதூக்கி விட்டதற்கு
சங்கத் தமிழ் மூன்றுந் தா. (கங்கை—வெள்ளம்)

(இப்பொழுது பாட்டே உங்களுக்குக் குழம்பியிருக்கும் என்று நினைக்கின்றேன்.)

'என்ன சொந்தப் பாட்டா இது!' என்றார்.

எங்கள் அண்ணன்தான் இதைக் குரு வணக்கமாகப் பாடச் சொன்னார் என்றேன். அவர் அர்த்தம் புரிந்துகொண்டார். எனக்கு ஒன்றும் தெரியவில்லை. அடுத்த நாளிலிருந்து குரு வணக்கமே வேண்டாம் என்று சொல்லி விட்டார். ஏன் என்று கேட்டுப் பார்த்தோம், தவறு ஏதாவது தெரியாமல் செய்துவிட்டோமோ என்று.

அவர், "வேண்டாம் என்றால் வேண்டாம்' என்றார்.

அப்பா கதை

அப்டா! கதை என்று கேட்டுக்கொண்டே அறைக்குள் நுழைந்தாள் குழந்தை கோமளம். ஆகட்டும் என்று சொல்லிவிட்டுப் பரீட்சைப் பேப்பர்களைத் திருத்திக் கொண்டிருந்தேன். திருத்துகின்ற பென்சிலை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டு சிணுக்கத்துடன் ‘முடியவே முடியாது; சொல்லு கதை’ என்றாள். நான் இன்றைக்குள் இவற்றைத் திருத்தித் தொலைக்கவேண்டும் போ நாயே அப்புறம் என்றேன். கண்களைக் கசக்கிக் கொண்டாள். கண்ணீரும் வரத் தொடங்கிற்று. நான் திரும்பிப் பார்த்தால் அழவும் தயாராயிருந்தாள். நான் திரும்பிப் பார்ப்பேனா என்ன? கால்களைப் பூமியில் தேய்த்துக் கொண்டே சாய்வு நாற்காலியின் பின்புறத்தைப் பிடித்துக்கொண்டு சிறிது நாழிகை நின்றாள். சிறிது நாழிகைக்கெல்லாம் எல்லாவற்றையுமே மறந்து விட்டுத் தன்னைத் தானே சுற்றத் தொடங்கினாள். நான் திரும்பிப்பார்க்கும் பொழுதெல்லாம் சுற்றுவதை நிறுத்தி விடுவாள். சுற்றுவதோ அதிகமாயிற்று. சிறு குழந்தை தானே! மயக்கம் வந்து திடீரென்று கீழே விழுந்தாள். கேட்டசத்தம் உடைந்த வளையல்களின் சத்தந்தான். திரும்பிப் பார்க்கலாமா என்று நினைத்தேன். ஆனால் பார்க்கவில்லை. சிறிது நாழிகை கழித்துத் திரும்பிப்பார்த்தேன். வளையல் குத்தி இரத்தம் கையிலிருந்து ஒழுகுகின்றது. உடைந்த ஒரு வளையல் துண்டோடு மற்றொன்றைப் பொருத்திப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த உதடுகள் உங்களுக்குத் தெரிகின்றதா? இல்லையானால் அது எப்படியிருக்குமென்றாவது உங்களால் நினைக்க முடிகின்றதா? காண வேண்டிய காட்சி. எல்லோருக்குமே கிடைக்கின்றதா இது?

என்ன பாப்பா! கீழே விழுந்து விட்டாயா? என்றேன். அவ்வளவுதான், கேட்க வேண்டுமா? வீடு முழுவதுமே அலறத் தொடங்கி விட்டது. ஓ வென்று அலறத்தொடங்கினாள். உள்ளே இருந்து ஒரு சத்தம் புறப்பட்டது. பள்ளிக்கூடத்தில் எப்படித்தான் இருக்கின்றீர்களோ, தெரிய வில்லையே; ஒரு குழந்தையை அழாது வைத்திருக்கத் தெரிய வில்லையே என்பது காதைக் கிழித்தது.

அசரீரியோ என்று நினைத்து மேலே பார்த்தேன். ஒன்றையும் காணவில்லை, வீட்டினுள்ளேயிருந்துதான் அந்தச் சத்தம் வந்தது.

யாரிடத்திலிருந்து அது வந்திருக்கக்கூடும் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. கட்டிவைத்தேன், திருத்தியது போதும் என்று. கதை சொல்ல ஆரம்பித்து விட்டேன். அழுகையை எப்படியாவது போக்க வேண்டுமே! உள்ளே இருந்து வருகின்ற இடியோசையைக் குறைக்கவும் வேண்டுமே! பக்கத்தில் கோமளத்தை அழைத்துக் கண்ணீரைத் துடைத்தேன்.

கதை சொல்லட்டுமா என்றேன்.

சொல்லப்பா! என்றாள் முகத்தைத்துடைத்துக்கொண்டு.

ஒரே ஒரு ஊரில் என்று தங்கு தடையில்லாமல் ஆரம்பித்தேன்.

மணி! அப்பா கதை —— என்று கூவினாள். மாடியில் பட்டம் விட்டுக் கொண்டிருந்த மணியும் பறக்கின்ற பட்டத்தை அப்படியே விட்டுவிட்டு ஓடிவந்து பக்கத்தில் உட்கார்ந்தான்.

சொல் அப்பா கதையை!

ஒரு ஊரில் என்று அப்பா சொல்லியிருக்கின்றார் என்று முன்னுரை சொன்னாள் கோமளம்.

இந்த லீவில் ஊருக்குப் போயிருந்தோமே அந்த ஊரிலா?

ஆமாம் அந்த ஊரிலேதான்.

நாம் இந்த லீவுக்குப் போய்த் தங்கியிருந்தோமே அந்த வீட்டிற்கு மேற்கே இரண்டு வீடு தள்ளி, அந்த வீட்டில் யார் இருக்கின்றார்கள் தெரியுமா?

நீலகண்டன் இருக்கின்ற வீடு அது. அந்த வீட்டிற்கு கிழக்கே மூன்றாவது வீட்டில் வாத்தியார் ஒருவர் இருந்தார். என்னடா! அந்த வீடு உனக்கு ஞாபகம் இல்லையா?

எனக்கு இருக்கிறதப்பா!

அவர் தமிழ் வாத்தியார்.

எங்கள் பள்ளிக்கூடத்துத் தமிழ் வாத்தியாரை உனக்குத் தெரியுமா அப்பா! அவர் உன்னைத்தெரியுமென்றாரே. நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து படித்தீர்களாமே. நேற்று என்னை அவர் வலிக்குமாறு குட்டி விட்டார். நான் கொஞ்சநாழி அழுது கொண்டிருந்தேன்.

ஏன் குட்டினார்?

நேற்று மாதப் பரீட்சை வைத்திருந்தார். அவர் எப்பொழுதும் கேள்விகளைப் பலகையில் எழுதிப் போடுவார். இதற்குப் பொருள் என்ன? சந்தர்ப்பம் கூறு. யார்? எது? ஏன்? அடிமாறாது

எழுது? இப்படித்தான் அவருடைய கேள்விகள் இருக்கும். நான் பேசாதிருக்கக்கூடாதா! அவர் வருவதற்கு இன்னும் நாழி இருக்கின்றதென்று நினைத்துக் கொண்டு அவர் கேள்வி கொடுத்தால் எப்படி இருக்குமோ அப்படியே கேள்விகளைப் பலகையில் எழுதிக் கொண்டிருந்தேன். என் நண்பர்கள் எல்லோரும் அப்படிக் கேட்கமாட்டார், இப்படித்தான் கேட்பார் என்று திருத்தம் சொல்லிக்கொண்டிருந்தார்கள். திடீர் என்று நுழைந்தார் உள்ளே. எல்லோரும் இடத்திற்கு ஓடி விட்டார்கள். நான் மட்டும் சிரித்துக்கொண்டே இருந்தேன். கேள்விகளைப் படித்துப் பார்த்து விட்டுச் சந்தோஷப்பட்டு 'மடையா' என்று சொல்வார் என்று நினைத்தேன். முகத்தைப் பார்த்தேன். கோபம் தாண்டவமாடிற்று. படீர் என்று தலையிலே ஒரு குட்டுக் குட்டி 'போடா அதிகப் பிரசங்கி' என்றார். நடுத்தலையிலே குட்டி விட்டாரப்பா!

வேண்டும் உனக்கு. நீ ஏன் எழுதினாய்?

அவர் கேள்விகளைப் பலகையில் எழுதினார். எல்லாம் நான் எழுதிய கேள்விகள்தான்.

நீ கதையைச் சொல்லப்பா! மணி எப்பொழுதும் இப்படித்தான்; குறுக்கே குறுக்கே வந்து கெடுத்து விடுவது.

அவருக்குச் சம்பளமோ மிகக்குறைவு. அவருக்கு குழந்தைகளோ இரண்டு. தெருவில் போவதையெல்லாம் வாங்கித் தரவேண்டுமென்று கேட்டுத் தொலைக்கும். எங்கிருந்து அவரால் வாங்கிக் கொடுக்க முடியும்? ஓயாது குழந்தைகள் அழுதுகொண்டே இருக்கும். அவருடைய மனைவியோ மகா கொடியவள். குழந்தைகள் அழத் தொடங்கி விட்டாலோ அவரைத் திட்டிக் கொட்டி விடுவாள். வீட்டுச் சண்டையினாலே அவர் பல நாட்கள் சாப்பிடாது கூடப் பள்ளிக்கூடம் போய் விடுவார். பசியோடு அவரால் எப்படிப் பாடம் சொல்லித்தர முடியும்? பெண் கல்வி என்ற பாடத்தை ஒரு நாள் வகுப்பில் நடத்திக் கொண்டிருந்தார். "பெண்கள் அடிமைகள், அறிவில்லாதவர்கள், மிகக் கொடியவர்கள், வஞ்சனை நிறைந்தவர்கள் அவர்களை நம்பக்கூடாது" என்பதுவரை படித்து அதற்கு வியாக்யானம் செய்ய ஆரம்பித்து விட்டார்.

"மிகக்கொடியவர்கள் என்பது உண்மைதான். வஞ்சக நிறைந்தவர்கள் என்பதற்குப் பல ஆதாரங்கள் பழைய நூல்களிலே இருக்கின்றன; பழைய புஸ்தகங்கள் எல்லாமே பெண்களை மாயை என்றுதான் சொல்லுகின்றன" என்ற காரணங்களோடு விளக்கி முடித்தார். முன்னால் இருப்பவர்கள் பெண்கள்; பெண்கள் பள்ளிக்கூடம் இது என்பதையும் அடியோடு மறந்துவிட்டார்.

"பெண்கள் அடிமைகள்........நம்பக்கூடாது என்று கூறுவ-தெல்லாம் சுத்தத்தப்பு; அதை யாரும் உண்மையென்று நம்பக்-கூடாது" என்று அந்த வாக்கியம் முடிகின்றது. அதை அவர் படிக்-காமல், பின்னால் எப்படி முடிகின்றது என்பதையும் பாராமல் வியாக்-யானம் செய்தார். முன்னாலிருக்கின்ற பெண்களுக்கு மிகுந்த கோபம் தான். அவரை, ஏன் இப்படிச் சொல்லுகின்றீர்கள் என்று கேட்டு-விட்டார்களோ; இன்னும் விளக்க ஆரம்பித்து விடுவார். தலைமை உபாத்தியாயினி இடத்தில் இதைச் சொல்லாது விடுவார்களா? பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற பொழுதெல்லாம் தாங்கள்தான் உயர்-ந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் அவர்கள். ஆண்-களைத் தங்கள் பள்ளிக்கூடத்தில் வேலைக்கு வைத்துக் கொள்வதே தங்களுடைய பெருமைக்குக் குறைவு என்றுதான் எல்லா சீமாட்டி-களும் நினைக்கின்றார்கள். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து சென்று தலைமை உபாத்தியாயினியிடத்தில் பெண்களை இழித்துத் தமிழ் வாத்தியார் பேசியதைச் சொல்லி விட்டார்கள்.

அடுத்தநாள் அவர் பள்ளிக்கூடத்திற்குப் போன வுடனேயே அவரிடம் ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. பெண்-களை இழிவாக வகுப்பிலே பேசியதற்குத் தக்க காரணம் தரவேண்டும் என்றும் இல்லாவிட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எழுதியிருந்தது. அவருக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. உண்மைக் காரணத்தைச் சொல்லிவிடலாமா என்று யோசித்தார். ஆனால் இதைச் சொல்ல அவருக்கு விருப்பமில்லை. வீடு வந்து சேர்ந்தார். மனைவியிடத்தில் நடந்ததைச் சொல்லி அவளே குற்ற-வாளி என்று குற்றம் சாட்டினார்.

அந்த அம்மாள் கேட்டவுடனே ஆடினாள், பாடினாள். என்ன செய்வார், பாவம்! போதும் இது வேறு தொல்லையா என்று சொல்லி விட்டுத் தம்முடைய அறையில் வந்து உட்கார்ந்தார்."

யார் அங்கே எட்டிப் பார்க்கின்றது?

யாராய் இருக்கமுடியும்? யார்தான் இங்கேவரமுடியும் இவள் இருக்கும்பொழுது! சாட்சாத் பத்தினித் தெய்வத்தின் திருமுகம்தான் அது.

இத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த அவள், குழந்தைகளுக்கு விளங்குகின்றாற்போலக் கதை சொல்லி விட்டீர்களே! கதையிலும் என் மண்டைதானா உடையவேண்டும்? என்றாள்.

சாப்பிடக் கூப்பிட வந்திருக்கின்றாள் என்று நினைத்த கோமளம் அப்பா! சா——என்று இழுத்துக் கொண்டே எழுந்தாள். வந்தால் தானே; என்ன செய்யச் சொல்லுகிறாய் என்றேன்!

பொருத்தமான சம்பளந்தான்

நான் ஒரு தமிழாசிரியர் என்பதை முதலிலேயே உங்களுக்குத் தெரிவித்து விடுகின்றேன். படிக்கின்ற பொழுதே வருங் காலத்தைப் பற்றித் திட்டம் போடுகின்றார்களே நான் அவர்களை விட எந்த வகையிலும் குறைந்தவனல்ல. கம்பராமாயணம் போன்ற காவியங்களையும் தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களையும் கரைத்துக் குடித்தவன் நான். தொல்காப்பியம் அகத்திணை இயல் படிக்கின்ற பொழுதெல்லாம் தமிழர்களுடைய ஒழுக்கம் இவ்வளவு சிறந்ததாக இருந்ததா என்று மகிழ்ச்சி அடைந்தவன்தான். புறத்திணை இயல் படிக்கும் பொழுது என்னே! இவர்களுடைய வீரம் என்று பக்கத்திலுள்ள தலையணையில் ஓங்கி யடித்து எனது வீரத்தைக் காட்டியுமிருக்கின்றேன். காவியங்களும் இலக்கணங்களும் கரையான் சாப்பிடுகின்ற விதத்தைத்தான் உங்களிடம் சொல்லப் போகிறேன். என்னிடத்தில் தவறு இருக்கின்றதா? நான் படித்தபடிப்பில் தவறு இருக்கின்றதா? என்பதை நீங்கள் ஆராய்ந்து சொல்லுங்கள். ஓய்ந்து உட்கார்ந்திருக்கின்ற பொழுது நாம் மாணவர்களுக்குப் புத்தி புகட்டுகின்றோமா அல்லது இருக்கின்றதற்கும் உலை வைக்கின்றோமா என்ற சந்தேகம் வருவதுண்டு. நாள்தோறும் நான் செய்கின்ற வேலையைச் சொல்லுகின்றேன். தயவு செய்து கவனிக்கமாட்டீர்களா?

முதல் முதலில் ஒருபள்ளிக்கூடத்திற்கு மனுப்போட்டேன். தம்மைவந்து பார்க்குமாறு மானேஜர் உத்தரவிட்டிருந்தார். போனேன் பார்ப்பதற்கு. என்னை நிற்க வைத்துக்கொண்டு தான் உட்கார்ந்து பேசினார் அவர். அவர் நிறையப் படித்தவராம். ஆங்கில நாகரிகத்தின் பன்னாடை தான் என்று நினைத்துக் கொண்டேன். நான் தமிழ் வாத்தியார் உத்தியோகத்திற்குத்தான் போனேன்.

உமக்கு இங்கிலீஷ் தெரியுமா என்று இங்கிலீஷிலேயே கேட்டார்.

என்னுடைய நிலைமையையும் கொஞ்சம் விளக்கிச் சொல்லி விடுகிறேனே. ஆங்கிலம் கொஞ்சம் படித்திருக்கிறேன். பேசுவதை ஒருவாறு புரிந்து கொள்வேன். ஆனால் பதில் சொல்ல முடியாது.

புரிந்து விட்டால் Yes என்று சொல்லுவேன். No என்று சொல்வதாய் இருந்தால் தொடர்ந்து பேசவேண்டிவரும். ஆகையால் அதை அளவோடுதான் பிரயோகிப்பேன். பேசுவது எனக்குச் சில சமயங்களிலே விளங்கவில்லையானல் புன் சிரிப்பாக இருந்து புரிந்து கொண்டதாகக் காட்டுவேன். அது போகட்டும்; கேட்டாரே ஆங்கிலம் தெரியுமா என்று; அவருக்கு Yes என்று சொல்லிவைத்தேன். அவரும் என்னைப் பல கேள்விகள் கேட்டு Yes னுடைய அர்த்தம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளப் பார்த்தார். Yes or No or சிரிப்பு இவற்றிலிருந்தே எனது பதிலைத் தெரிவித்தேன். எப்படியோ எனக்கு அங்கே உத்தியோகமாகிவிட்டது.

தலைப்பாகை சமேதராய்ப் பிரசன்னமானேன். நான் தான் இந்தப் பள்ளிக் கூடத்தில் தலைமைத் தமிழாசிரியரும் கடைசித் தமிழாசிரியரும். தலைமையாசிரியரோ தமிழை அப்படி வளர்க்க வேண்டும்; இப்படி வளர்க்க வேண்டும் என்று பிரசங்கம் வைத்தார் அரைமணி, நேரம் போன முதல் நாளன்று ஆகட்டும் என்று மலையைப் புரட்டி வைத்து விடுவதாகச் சொன்னேன் அவரிடம்.

முதல் பாரத்திலிருந்து ஆறும் பாரம்வரை நானே எடுத்தாக வேண்டும். வேலை அதிகமாக இருக்கின்றது என்று தலைமையாசிரியரிடம் புகார் சொன்னலோ தமிழின் பெருமையைப்பற்றி நீண்ட நேரம் பேசி என்னை அனுப்பி விடுகின்ருர். அவர் பெரிய பேர்வழி. முதல் பாரத்திற்கு,

"நீரில் குமிழி இளமை நிறை செல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள் ! — நீரில்
எழுத்தாகும் யாக்கை"

இதற்குப் பிறகு பாட்டு மறந்து போய் விட்டது. இதோடு இருக்கட்டுமே. முன்னுலிருக்கின்றவர்கள் இளைஞர்கள், எதிர்கால மனிதர்கள் என்பதையும் மறந்து பிரசங்கம் செய்வேன். இளமை நீர்க் குமிழி போல சீக்கிரம் அழிந்து போகும், செல்வமோ அலைகள் போல வந்து வந்து போகும், உடம்போ நீரில் எழுதிய எழுத்தைப் போல கண் மூடிக் கண் திறப்பதற்குள் அழிந்து, போகும் ஆகையால் கடவுளை வணங்குங்கள் என்று உதாரண பூர்வமாக விளக்கத் தொடங்கி பதவுரை, பொழிப்புரை, கருத்துரை முதலியன கொடுத்து விட்டுத் தான் வெளியே வருவேன். இந்தப் பாட்டை அவர்கள் மனப் பாடம் வேறு செய்தாக வேண்டும். ஏனைய நாடுகளிலுள்ள மாணவர்

களுக்கும் இது போன்ற கருத்துக்கள் தான் போதிக்கப்படுகின்றனவோ? என்னவோ?

2-ம் பாரத்திற்குப் போய் என்ன சொல்லிக் கொடுக்கின்றேன் என்று கேட்கிறீர்களா? அங்கேயும் இந்தப் பாட்டுக்கள்தான்.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா.

இது இன்னும் சிறிது வேகமாக இருக்கிறதல்லவா! உதாரணங்களை வரிசை வரிசையாக அடுக்கி உலகில் ஒன்றுமே நிலைக்காது என்பதை அவர்கள் மனத்திலே நிலை நாட்டின பிறகுதான் உட்காருவேன். பட்டினத்தார் பாட்டு இரண்டொன்றைக் கூட எடுத்துக் காட்டுவேன். நிலையாமையை விளக்கிச் சொல்லுவதிலே உத்தியோகமான சில மாதங்களுக்குள்ளேயே கெட்டிக்காரனாகி விட்டேன். நான் கெட்டிக்காரன் ஆகாமல் என்ன செய்ய முடியும்? பாட புஸ்தகங்களெல்லாம் அப்படித்தானே இருக்கின்றன. 3-ம் பாரத்திற்கு, போய் கூறுமையில் சில பாட்டுக்கள் திருக்குறளிலிருந்து எடுத்துப் போடப்பட்டிருக்கும். சாதாரணமாகவே அரிச்சந்திரன் வந்து வந்து போகவேண்டிய கட்டம் இது. பொய் சொல்லக் கூடாது என்று அவன் இருந்ததினாலேதானே அவனுக்கு மனைவி, மகன் இவர்களை விற்கவேண்டி யிருந்தது; பொய் சொல்லி யிருந்தால் இந்தத் துன்பங்களெல்லாம் அவனுக்கு ஏற்பட்டிராதே என்பதை நான் எடுத்துச் சொல்லுவேனா என்ன! அரிச்சந்திரனை எப்படியோ உதாரணமாகக் காட்டுவேன். அதுகூட இப்பொழுது மறந்து போய்விட்டது. அது கூடாது, இது கூடாது என்று சொல்வதெல்லாம் நானாகத்தான் இருக்கும். இதைக் கேட்டு அவர்கள் அது செய்யாமல் இருந்து விடுவதுமில்லை, அவர்கள் கேட்டும் அதன்படி நடக்கவில்லையே என்று நான் விட்டு விடுவேனா? பாடம் நடத்தியாக வேண்டுமே!

நான்காம் பாரத்திற்கு இந்தத் தொல்லைகளெல்லாம் இல்லை. அத்தனையும் கதைப் பாடல் தான்.

குசேலோபாக்யானம் தான் பாடம். குசேலருடைய குழந்தைகள் தரித்திரத்தால் எப்படிச் சோறு இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். குசேலருடைய ஆடையில் எத்தனை ஓட்டைகள் இருக்கும்; இவற்றைப் பற்றிய பாடல்களாகத்தான் இருக்கும். அவை கிருஷ்ணன் துவாரகையில் எவ்வளவு சுக போகங்களுடன் இருக்கின்றான் என்பதை விளக்கும் பகுதியாக நிச்சயமாக இருக்காது. அதைச்

சொல்லி மாணவர்கள் மனத்தைக் கெடுத்து விடுவதா என்ன? எல்லோ-ரும் அனுபவித்துத்தான் படிக்கிறார்கள், எனக்குமட்டும் என்ன? அநுபவித்துத்தான் நானும் பாடம் சொல்லுகின்றேன். தனியாக இருந்து, மாணவர்களை இப்படி வீணாக்குகின்றோமே என்று நினைக்கின்ற பொழுதுதான் எனக்குப் பிள்ளை இல்லாததன் உண்மை தெரியவருகின்றது.

போதாக் குறைக்கு அரிச்சந்திர புராணம் வேறு; பெரும்பா-லும் மயான காண்டத்திலுள்ள பாட்டுக்கள்தான் பாடமாக இருக்கும். சந்திரமதி குழந்தையைத் தேடிப் பிடித்து 'பனியால் நனைந்து வெயி-லால் உலர்ந்து பசியால் மெலிந்து........அநியாய வெங்கண் அரவால் இறந்த அதிபாவம் என்கொல் அறியேன்' என்று பாடிக் கொள்ளிதனை வைப்பேனு கூசாமல் என்று கூறிக் கொள்ளி வைப்பது முடியப் பாட மாக இருக்கும். மாணவர்கள் நன்றாகக் கவனிப்பார்கள். நான்தான் அவர்களை முதல் பாரத்திலிருந்து தயார் செய்து கொண்டு வந்திருக்-கின்றேனே! மாணவர்கள் பிற்காலத்தில் அழ வேண்டிய சந்தர்ப்-பம், கொள்ளி வைக்க வேண்டிய சந்தர்ப்பம் இவற்றிற்கெல்லாம் பயன்படும் என்பதற்காகத்தான் இதைப் பாடமாக வைத்திருக்க வேண்டும்.

5-ம் பாரம் உயர்ந்த வகுப்பல்லவா! பாரதம்தான் அங்கே பாடம். "ஆவியோ நிலையில் கலங்கியது யாக்கை அகத்ததோ புறத் ததோ அறியேன்" இந்தப் பாட்டு வராமலிருப்பதில்லை. என்னுடைய உபதேசங்களைக் கேட்டுக் கொண்டு வருபவர்களுக்கு ஆவி கலங்கா-மல் என்ன செய்யும்? கர்ணனுடைய வீரத்தனத்தையும் விளக்கிப் பார்ப்பேன்., ஆனால் அவர்களுக்கு அது விளங்குவதில்லை. "ஐயம் இட்டுண்'' என்பதுதானே அவர்கள் அரிச்சுவடியில் படித்த பாட்டு.

அரசாங்கத்தார் வெளியிடுகிறார்களே 6-ம் பாரத்திற்கு; அதைப் பற்றிக் கேட்கின்றீர்களா? அவர்கள் மிக நல்லவர்கள் என்று-தான் எனக்குத் தோன்றுகின்றது. இலக்கியச் சுவை மாணவர்க-ளுக்கு வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறையுடையவர்கள். ஆகையால் அவர்கள் கம்பராமாயணத்தைப் பிடித்துக் கொள்ளுகிறார்-கள். எளிமையான பாடல்களாக இருக்க வேண்டுமென்பதை மட்-டும் அவர்கள் மறந்து விடுவதில்லை.

இராமன் நாட்டை விட்டுக் காட்டிற்குப் போகின்ற நகர் நீங்கு படலம் பாடமாக இருக்கும். முறைப்படி என் உபதேசத்தை ஒழுங்-

காகக் கவனித்து வருவார்களானல் அவர்கள் காட்டிற்குப் போக வேண்டியது தானே. இந்தப் பகுதி யில்லையானல் சீதை அசோக-வனத்திலிருந்து இராமனை நினைத்துப் புலம்புகின்ற பகுதியாக இருக்-கும். எல்லாமே நல்ல பகுதிகள் தான்.

என்னிடத்திலே இப்படிப் படித்து வந்த மாணவர்கள் காலேஜ் களுக்குப் போனவுடனேயே கெட்டுப் போகிருர்கள். இதற்கு என்ன காரணம் இருக்க முடியும் என்று ஒரு நாள் அவர்களின் தமிழ்ப் புஸ்-தகத்தை வாங்கிப் படித்துப் பார்த்தேன். உண்மை பிறகுதான் விளங்கிற்று. புஸ்தகத்தைப் பிரித்தேன், "வள்ளியம்மை திரு மணப் படலம்" பாடம். ஏன் மாணவர்கள் கெட்டுப்போக மாட்-டார்கள்; இப்படி புஸ்தகங்கள் இருந்தால் என்று நினைத்துப் பத்து பக்கம் தள்ளி அப்புறம் பார்த்தேன். துச்சாதனன் துகிலுரி படலம்; சிவ சிவா; காலேஜ் மாணவர்கள் புஸ்தகமா இது?

நான் சொல்லிக் கொடுத்த பகுதிகள் எப்படி இருந்தன? இந்தக் காலேஜ் வாத்தியார்கள் சொல்லிக் கொடுக்கும் பாடம் எப்படி இருக் கிறது பாருங்கள்! எனக்கு அதனலேதான் இவ்வளவு அதிகமாகச் சம்பளம் கொடுக்கின்றுர்கள் போலிருக்கின்றது. பொருத்தமான சம்பளந்தான். இலக்கணம் எப்படிச் சொல்லிக் கொடுப்பேன் என்று கேட்கின்றீர்களா? போதும் போதும். இதைச் சொல்லி விட்டதற்கே சொன்னவன் யார் என்று தெரிந்து கொண்டால் சபிக் கத் தொடங்கி விடுவார்களே தமிழாசிரியர்கள். ஆகவும் கெடவும் பாட வல்லவர்களாயிற்றே அவர்களின் முன்னேர்கள்.

3684

வேண்டாம் கலியாணம்

நண்பர் சீநிவாசன் என்னைக் காணும் பொழுதெல்லாம் என்ன! இந்த வருஷமாவது ஏதாவது உண்டா என்று கேட்கத் தவறுவதில்லை. எங்கே! ஸார்! கலியாணம் இந்தக் கஷ்ட காலத்திலே! என்று சொல்லிக் கொண்டு வந்தேன். உங்களுக்கெல்லாம் என்ன ஸார்! என்று சொல்லிக் கொண்டே அவர் போவார். என்னைப் பற்றி அவர் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிறார்; பாவம் பள்ளிக்கூடத்திலே கொடுக்கின்ற சம்பளத்தை அப்படியே துணி மணிகளுக்குச் செலவிட்டு எப்பொழுதும் வெள்ளையாகத் திரிவேன். நெடுநாட்களாகக் கைக் கடிகாரம் ஒன்று வாங்க வேண்டுமென்று நினைத்ததுண்டு. அதுவும் ஒன்று வந்து சேர்ந்தது. வாங்கிப் போட்டேன் இருக்கட்டும் என்று. கைக் கடிகாரம் என்ற பெயர் என்னுடைய கடிகாரத்திற்குத்தான் பொருத்தம். கையை விட்டு அது போவதே கிடையாது. தஞ்சாவூர் மிராசுதார்களுக்கு வெற்றிலைப் பாக்குப் பெட்டி கையை விட்டுப் பிரியாதது போல. தூங்கினால் கூடக் கையிலேதான் இருக்கும். கடிகாரம் கையில் இருக்க, பாடியும் துண்டும் மேலே போட்டுக் கொண்டு நடப்பதிலே எனக்கு அளவிலா ஆனந்தம்.

கையைப் பார்த்துச் சொல்லுங்கள் என்றார் நண்பர் ஒருவர். ரேகை சாஸ்திரம் எனக்குத் தெரியாதே என்றேன்: மணி பார்த்துச் சொல்லுங்கள் என்றார். கைக்கும் மணிக்கும் வித்தியாசமே இல்லை அவருக்கு; அவர் என்னைவிடப் பெரியவராக இருக்கிறார்.

மற்றொரு முறை நண்பர் சீநிவாசனைச் சந்தித்த பொழுது தான் உண்மை எனக்கு விளங்கிற்று.

நீங்கள் என்ன பள்ளிக்கூடத்தில் தமிழ் வாத்தியாரா? நீங்கள் ஏதோ பேங்கில் இருக்கின்றீர்கள் என்றல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஆமாம் ஸார்! என்று தலையை அசைத்தேன். இதற்குப் பிறகு என்னிடத்தில் இவர் பேசுவதற்கும் முன்பு பேசியதற்கும் வித்தியாசம் இருக்கத்தான் செய்கின்றது. அதற்காக நான் என்ன செய்ய முடியும்?

என்ன ஸார்! இந்த வருஷமாவது ஏதாவது உண்டா என்பதை மட்டும் அவர் கேட்பதில்லை. அவர் கேட்காததினாலே நான் கலியாணத்தைப் பற்றி மறந்து விடவுமில்லை. முதலில் ஹோட்டல் சாப்பாடோ மிக மோசம். கிடைப்பதோ மிகக் கஷ்டம். டிபன் ஹோட்டல்களோ சொல்ல வேண்டியதில்லை. இதெல்லாம் ஒருபுற மிருக்கட்டும் என்று பார்த்தாலோ இருப்பதற்கு இடமும் கிடைக்கவில்லை. பெரிய ஹோட்டல்களிலே அவ்வளவு பணம் கொடுத்து இடம் தேடிக் கொள்ள முடியுமா? வீடுகளிலே பார்த்தாலோ தனியாக இடம் கிடைப்பது கஷ்டமா யிருக்கின்றது. ஏதாவது அத்தி பூத்தாற் போல இருந்தாலும் அதுவும் காலியாவதாக இல்லை. மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே ஒருவர் அறையைக் காலி செய்யப் போகிறார் என்பதை எப்படியோ தெரிந்து கொண்டேன். ஒரு மாதம் முன் பணமும் கொடுத்துத் திட்டம் செய்தேன். இதில் ஒரு விசேஷம் என்னவென்று கேட்கின்றீர்களா? அப்படி இடம் இருந்து கொடுத்தாலும் கலியாணம் ஆனவர்களுக்குத்தான் அதுவும் கொடுக்கப்படுமாம். நான் எப்படியோ சமாளித்துக் கொண்டேன். என்னைப் பார்த்தாலே கலியாண மானவர் போலத்தான் தோன்றும்; என்னைக் காணும் பொழுதெல்லாம் என்னைப் பற்றி அதிகம் தெரியாத நண்பர்கள் குழந்தைகள் எல்லோரும் சௌகரியமா என்றுதான் கேட்பது வழக்கம்.

எனக்குக் கலியாணம் ஆகிவிட்டது என்று சொல்லித்தான் நான் அந்த அறைக்குக் குடி போனேன். என்ன நம்பிக்கையோ? என்ன சந்தேகமோ? யார் கண்டார்கள், எப்படியோ அந்த வீட்டுக்காரன் தெரிந்து கொண்டான் எனக்குக் கலியாணமாகவில்லை என்பதை.

ஸார்! வேறு இடம் பார்த்துக் கொள்ளுங்கள். இதெல்லாம் குடும்பங்கள் இருக்கின்ற வீடு என்று சொல்ல ஆரம்பித்து விட்டான். நான் மிகவும் பயந்தவன் கூட, தமிழ் வாத்தியார் தானே! எனக்கு எங்கே இருந்து அப்படித் தைரியம் பிறக்கும்! இது மட்டும் காரணமல்ல என்னை அவன் போகச் சொல்லுவதற்கு; இராத்திரியில் அதிக நாழி விளக்குப் போட்டுக் கொண்டு படிப்பேன். அது அவனுக்குப் பிடிப்பதில்லை. எப்படியும் இந்த வருஷம் கலியாணம் செய்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பது என்று தீர்மானித்தேன். கலியாணம் செய்து கொண்டால்தான் சென்னையில் வாழ முடியும் என்ற முடிவுக்கும் வந்து விட்டேன்.

இன்னொன்றும் நான் நினைப்பதுண்டு. அதையும் சொல்லு கின்றேன். சிரிக்காதீர்கள். நான் தலைமைத் தமிழாசிரியன். எனக்கும் இன்னொரு தமிழாசிரியருக்கும் சம்பளத்தில் ஐந்து ரூபாய் வித்தியாசம். அவர் கலியாணமானவர். குழந்தைகள் மூன்று அவருக்கு உண்டு. சம்பளம் வாங்கும் பொழுதெல்லாம் என்னை விட அவர் அதிகமாகத்தான் சம்பளம் வாங்குகின்றார். பஞ்சப்படி குடும்பத்திலுள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் ஐந்து ஐந்து ரூபாய் என்றும் குழந்தைகள் ஒவ்வொன்றிற்கும் மூன்று ரூபாய் என்றும் கணக்குப் போட்டுக் கொடுக்கிறார்கள். ஆகையால்தான் அவர் அதிகச் சம்பளம் வாங்குகிறார். நான் தலைமைத் தமிழாசிரியனாக இருந்தும் அவருக்குக் குறைவாகத்தானே நாம் சம்பளம் வாங்கவேண்டியிருக்கின்றது என்று நான் நினைப்பதுண்டு. இதை வெளியே சொன்னால் சிரிக்க மாட்டார்களா? இதுவரையிலும் கலியாணம் செய்து கொள்ளாததற்குக் காரணம் சம்பளம் போதாதே என்பதுதான். கொடுக்கின்ற சம்பளம் ஒருவருக்குத்தான் போதும். ஒரு வேளை தமிழ்ப் பண்டிதர்களுக்கு மனைவி மக்களெல்லாம் எதற்கு? என்று அவர்கள் நினைக்கின்றார்களோ என்னவோ? எனக்குத் தெரியாது.

கலியாணம் செய்து கொள்ளுங்கள். டியூஷன் ஏதாவது வைத்துக் கொண்டால் போகிறது என்று எனது நண்பர்களுள் சிலர் யோசனை கூறினார்கள். இதை விட இன்னம் ஒரு முக்கியமான காரணம் என்ன தெரியுமா?

என்னைப் பார்க்கின்ற நண்பர்கள் எல்லோரும் என்ன ஸார் இப்படி இளைத்துப் போய் விட்டீர்களே; ஹோட்டல் சாப்பாட்டை விட்டுத் தொலையுங்கள் ஸார் என்று உபதேசம் செய்தார்கள். நான் இளைத்துப் போகாமல் கூட இருக்கலாம், கண்டவுடனே ஏதாவது பேசியாக வேண்டுமே! நான் குடும்பத்தோடு இல்லை யென்பது அவர்களுக்குத் தெரியும். ஆகையால் நான் இளைத்துப் போய் விட்டதற்காக அவர்கள் வருத்தப்படுகிறார்கள். அடிக்கடி கண்ணாடியையும் பார்த்துக் கொள்வேன். எப்படியோ லீவில் ஊருக்குப் போய் கலியாணம் செய்து கொண்டு வந்து விட்டேன். வீடும் கிடைத்தமையால் குடும்பத்தோடுதான் இப்பொழுது இருக்கின்றேன்.

கொடுக்கின்ற சம்பளமோ போதவில்லை. வருகின்ற பணத்தைக் கொண்டு குடும்பம் நடத்தவும் எனக்குத் தெரியவில்லை. அதற்காக டியூஷன் கூட ஒன்றிற்கு இரண்டாக வைத்துக் கொண்டேன். காலையில் ஒரு டியூஷன், மாலையில் ஒன்று, வீட்டில் உட்காரவோ

நாழி யில்லை. சாப்பிடுவதற்கோ நேரமில்லை. பெண்கள் மூலமாக சினிமா, இரயில் முதலிய இடங்களில் டிக்கட்டுகள் வாங்கிக் கொண்டு போகின்றார்களே ஆண் சிங்கங்கள், அவர்களைப் போலக் கலியாணம் செய்து கொண்டாலாவது இடமும் சாப்பாடும் கிடைக்குமென்று நினைத்துத்தான் கலியாணம் செய்து கொண்டேன். இப்பொழுது இரண்டிற்கும் குறைவில்லை. ஆனல் இருக்கவும் சாப்பிடவும் நாழி யில்லை.

ஆனல் என்ன நாழி யில்லை என்றாலும் நண்பர் சீநிவாசனின் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலும் யோக க்ஷேமங்கள் விசாரிக்காமலும் இருக்க முடிவதில்லை. நான் விசாரிக்கா விட்டால் அவர் விடுவாரா என்ன? என்ன ஸார் லீவு எப்பொழுது வருகின்றது? லீவுக்கு ஊருக்குத் தானே என்பார். ஆமாம் என்று சொல்லி விட்டால்தான் சீக்கிரமாக விடுவார். மாமியார் வீட்டிற்குத் தானே என்று சொல்லிக் கொண்டே நடையைக் கட்டுவார். லீவு வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னேயே இதைத் தொடங்கி விடுவார். லீவு விட்ட பிறகு சந்தித்து விட்டாரோ இன்னும் ஊருக்குப் போகவில்லையா என்று கேட்டுக் கொண்டே யிருப்பார். லீவோ தொடங்கி விட்டது. ஊருக்குப் போகலா மென்று நினைத்தாலோ இங்கிருக்கின்ற அவ்வளவு சௌகரியங்கள் ஊரிலில்லை. முதலாவதாக இதைப் பாருங்கள். மாலை வேளையில் எங்கேயாவது போக வேண்டும் என்று நினைத்தால் மனைவியையும் கூட அழைத்துக் கொண்டு கடற்கரைப் பக்கம் போய் வரலாம். அங்குக் கடற்கரை ஏது? கடற்கரை யிருந்தால்தான் என்ன? நாங்கள் இருவரும் போனல் ஊரார் பேசாது இருப்பார்களா என்ன? என்னுடைய ஊருக்குப் போகலா மென்றாலோ இந்த அசடுக்கும் எனது தாய்க்கும் கீரிக்கும் பாம்புக்கும் உள்ள சம்பந்தந்தான். கலியாணம் பண்ணிக்கொண்டவுடனேயே தாயாரை எட்டிக் கூட நான் பார்க்காத பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. வந்த இரண்டு மாதங்களுக்குள் ளேயே எனக்கு இதனைத் தேடிக் கொடுத்து விட்டாள். யாரை நோவது?

நீங்கள் வேண்டுமானல் உங்களூருக்குப் போய் உங்கள் தாயாரை யெல்லாம் பார்த்து விட்டு வெகுமதி கொடுத்தால் வாங்கிக்கொண்டு வாருங்களேன் என்று கூட அவளும் சொல்லுகின்றாள். ஆனல் தன் ஊருக்கு மட்டும் போகவேண்டு மென்று தலை கீழாக நிற்கிறாள். எனக்கு என்னவோ அவர்கள் வீட்டிலே போய் ஒரு மாதம் தங்கி யிருப்பதற்குப் பிடிக்கவில்லை. அவர்கள் ஏழைகள் கூட,

எப்படியோ எங்களுக்குச் சௌகரியம் செய்து தருவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்க நான் விரும்ப வில்லை.

என்னுடைய ஊருக்குப் போனால் போகின்ற செலவு வருகின்ற செலவு இதோடு முடியும். அவளுடைய ஊருக்குப் போனால் புதிய ஜவுளிகள் சமேதராய்ச் சென்று இறங்க வேண்டும். அதுதான் மரியாதைகூட. இன்னின்னதுவாங்கிக் கொண்டுதான் போகவேண்டுமென்று ஒரு ஜாப்தா வேறு அவள் கொடுத்திருக்கின்றாள். அப்படியே இவற்றை யெல்லாம் வாங்கிக் கொண்டு போவதாய் இருந்தாலும் கடன்தான் வாங்கியாக வேண்டும். இப்பொழுது ஐம்பது ரூபாய் வாங்கிச் செலவழித்து விட்டாலோ அடுத்த வருஷம் முழுதும் மாதா மாதம் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்துத் தீர்க்க வேண்டும். இந்தத் தொல்லைகளை யெல்லாம் விட இங்கேயே இருந்து விடுவது தான் நல்லது என்று நான் முடிவு செய்திருக்கின்றேன். அவளுக்கு இதை இன்னும் சொல்ல வில்லை.

“வருஷத்தில் இரண்டு மாதம் லீவு வருகின்றது; போய்த்தான் வாருங்களேன் இரண்டு பேரும்” என்று அடுத்த வீட்டுப் பெண்களும் அவளுக்கு உபதேசம் செய்கிறார்கள். நான் ஊருக்குப் போவதாயிருந்தால் இரண்டு டியூஷன்களையும் நிறுத்தியாக வேண்டும். அதில் மாதா மாதம் இருபது ரூபாய் வந்து கொண்டிருக்கின்றது. இந்த லீவுக்கு இங்கேயே இருந்து சொல்லிக் கொடுப்பதாக ஒத்துக் கொண்டுதான் டியூஷன் எடுத்தேன். நான் இப்பொழுது விட்டு விட்டுப் போனால் அவர்கள் வேறு யாரையாவது அமர்த்தி விடுவார்கள். லீவெல்லாம் முடிந்து வந்த பிறகு டியூஷனும் இல்லாது போய் விடும். இத்தனை நாள் வாத்தியார் வந்தார்; இத்தனை நாள் வரவில்லை என்று கணக்குப் பார்த்துச் சம்பளம் கொடுக்கின்றார்களே அவர்களைப் போன்றவர்களல்ல இவர்கள். போனேனோ போகவில்லையோ என்னிடத்திலுள்ள நம்பிக்கையினாலே மாதம் பத்து பத்து ரூபாய் கொடுத்து விடுகிறார்கள். டியூஷனும் இல்லாது போய்க் கடனும் வந்து விட்டால் என்ன செய்வது என்பதுதான் என்னுடைய கவலையா யிருக்கின்றது.

அவள் மட்டும் என்னவோ அடுத்த வீட்டு அம்மாவிடத்தில் தன் ஊரின் நீர்வள நிலவளங்களைப் பற்றி யெல்லாம் பேசுகின்றாள். தங்கள் வீடு தெற்குப் பார்த்த வீடு; காற்று நன்றாகக் கிடைக்குமென்பது முதல் பசு மாடுகள் இரண்டு இருக்கின்றன; ஆகையால்

பானுக்குக் குறைவில்லை என்பது வரை பேசித் தீர்க்கின்றாள். இவ்வளவு சொல்லியும் நான் புறப்படாது இன்னும் ஏதோ வேலை யிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றேன் என்பதையும் சொல்லி அலுத்துக் கொள்ளுகின்றாள்.

இந்த நிலைமையில் அடுத்த வருஷம் பள்ளிக்கூடம் வேறு மாறியாகவேண்டி யிருக்கின்றது. அதற்கெல்லாம் இங்கிருந்தால்தான் சௌகரியமாக இருக்கும். வருஷா வருஷம் ஒவ்வொரு பள்ளிக்கூடமாகப் பார்த்துக் கொண்டே வருகின்றேன். என்னுடைய ஜாதகம் என்னவோ அப்படி யிருக்கின்றது. முதலில் ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்தில் இருந்தேன். ஒரு பெண் வித்துவான் தேர்ச்சி பெற்று விட்டு வந்தாள். அவ்வளவுதான் எனக்குச் சீட்டுக் கொடுத்து விட்டார்கள். பிறகு ஒரு கிறிஸ்துவப் பள்ளிக்கூடத்தில் இருந்தேன். என்னை நியமிக்கும் பொழுதே இது நிலையான இடம் இல்லை என்று சொல்லி விட்டார்கள். அங்கே இருந்த கிறிஸ்தவ வாத்தியார் ஒருவர் என்னிடமே இரண்டு வருஷங்கள் படித்தார்; வித்துவான் பரீட்சைக்குப் போய் அவர் பாஸ் செய்து விட்டதால் எனக்கும் அங்கே யிருந்து வெளியே போவதற்குப் பாஸ் கிடைத்து விட்டது.

நான் இப்பொழுது இருக்கின்ற பள்ளிக்கூடமோ முதலியார்கள் பள்ளிக்கூடம். வருஷா வருஷம் கொடுக்கும் சம்பள உயர்வு எல்லாம் என்னைத் தவிர மற்ற எல்லோருக்கும் கொடுப்பார்கள்; நான் முதலியாரல்லவே. முதலியாரில் யாரோ ஒருவர் B. O. L. பாஸ் பண்ணி யிருக்கின்றாராம். ஆகையால் அடுத்த வருஷம் ஒரு B O L. ஐத்தான் சீனியராகப் போடவேண்டுமென்று பள்ளிக்கூடத்தார் பேசிக் கொள்வதும் என் காதில் கேட்கின்றது. நான் அங்கேயே இருந்தால் ஜூனியராகத்தான் இருக்க வேண்டும். சீனியராக இருந்த நான் அப்படி இருந்து வேலை செய்ய விரும்ப வில்லை. ஆகையால்தான் பள்ளிக்கூடம் மாறவேண்டு மென்று நினைக்கின்றேன்.

செட்டியார் பள்ளிக் கூடத்திலே இடம் இருக்கின்றதாம். ஆனால் செட்டியாராகப் பார்க்கின்றார்களென்று கேள்வி. என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. எந்தப் பள்ளிக்கூடத்திற்கு மனுப் போடலாமென்று பார்க்கின்றேன்.

எந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போனாலும் நாற்பத்தைந்து ரூபாய்க்கு மேல் இல்லை. ஒவ்வொரு சாதியாரும் தங்களுக் கென்று ஒவ்வொரு பள்ளிக்கூடம் வைத்துக்கொண்டமையால் எந்தப் பள்ளிக்

கூடத்திலும் நீண்ட நாள் இருக்க முடியவில்லை. என் ஜாதியிலோ பள்ளிக் கூடம் ஒன்றும் இல்லை. எப்படியாவது ஒரு பள்ளிக் கூடம் தொடங்கியாக வேண்டும். அப்பொழுதுதான் எனக்கு வேலை கிடைக்கும்; நீடித்தும் இருக்கமுடியும். நகரத்தார் சங்கச் செயலாளர் கனக சபாபதி பிள்ளையிடம் பல வருஷங்களாகவே சொல்லிக் கொண்டு வருகின்றேன் பள்ளிக்கூடம் ஒன்று தொடங்க ஏற்பாடு செய்யுங்கள் என்று. இந்த லீவிலாவது அவரையும் தூண்டி ஏதாவது செய்யவேண்டும். எத்தனைப்பள்ளிக்கூடங்கள் மாறிக்கொண்டிருப்பது! எனக்கே வெட்கமாக இருக்கிறது. என்னுடைய நிலையைத் தெரிந்து தானே அல்லது சாதாரணமாகவோ, நண்பர்கள் காணும் பொழுதெல்லாம் இப்பொழுது எந்தப் பள்ளிக்கூடத்தில் இருக்கிறீர்கள் என்று கேட்கின்றார்கள். எங்கள் சங்கச் சார்பிலே பள்ளிக்கூடம் ஒன்று தொடங்கியாக வேண்டும். இல்லையானால் விவாகரத்து செய்து கொள்ளவேண்டும். இல்லையானால் எப்படிச் சமாளிக்க முடியும்?

அவளுடைய தம்பிக்கும் நேற்றுக் கடிதம் எழுதியிருக்கின்றேன். அவனுக்கு இங்கு வேலை பார்த்திருப்பதாகவும் உடனே புறப்பட்டு வர வேண்டுமென்றும். வந்த உடனே “நேற்று மீண்டும் மானேஜரைப் பார்த்தேன்; இன்னும் ஒரு மாதத்தில் வேலை தருவதாகச் சொல்லியிருக்கிறார்” என்று சொல்லி அவனோடு இவளையும் ஊருக்கு அனுப்பி வைப்போம்; இதுதான் நல்லது.

நல்ல வேளையாகப் பள்ளிக் கூடமும் தொடங்கப்பட்டு நானும் அங்கு வாத்தியாராகப் போனால் பிறகு அவளை அழைத்துக் கொள்ளலாம். இவ்வளவு தொல்லையும் கலியாணம் செய்து கொண்டதால் தானே! கலியாணம் செய்து கொள்ளாத தமிழாசிரியர்களே! உங்களுக்கு ஒரு வார்த்தை. உங்கள் ஜாதிப்பள்ளிக்கூடமிருந்து அதில் தமிழ் வாத்தியாராக நீங்கள் இருந்தால் கலியாணம் செய்துகொள்ளுங்கள். இல்லையானால் வேண்டாம் கலியாணம் உங்களுக்கு.

யாருக்கு? என்ன வெறுப்பு?

எங்கள் பள்ளிக் கூடத்திற்குப் பொங்கல் பண்டிகை வந்தது. பொங்கல் வருவதற்கு முன்னாலேயே வீடுகளிலுள்ள தூசுகளை யெல்லாம் அடித்து வெள்ளை பூசுவார்கள். இன்னும் எட்டு நாள் நான்கு நாள் என்று பேசிக் கொள்வார்கள். பள்ளிக்கூடத்திலும் இப்படியேதான் தூசுகளை யெல்லாம் அடித்து வெள்ளை பூசுகிறார்கள். இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன; அது முடிந்து விட்டால் பிறகு நன்றாகத் தூங்கலாம் என்ற பேச்சு வாத்தியார்களிடையே புறப்பட்டது.

இன்ஸ்பெக்ஷனைத்தான் சொல்லுகின்றேன். பூகோள வாத்தியார்கள், சயன்ஸ் வாத்தியார்களெல்லோரும் பரணில் போட்டிருந்த படங்கள் எல்லாவற்றையும் தூசு தட்டி எடுத்துச் சுவர்களிலே மாட்டினார்கள். நம்பர்கள் வேறு அவற்றிற்குப் போட்டார்கள். வாத்தியார்களெல்லோருமே சுறுசுறுப்பாகவே காணப்படுகின்றார்கள். நின்று பேசுவதற்குக்கூட நாழியில்லை அவர்களுக்கு. எல்லாம் இன்ஸ்பெக்ஷன் முடியட்டும், பிறகு பேசிக்கொள்வோம் என்று எது கேட்டாலும் சொல்லிவிட்டு நடக்கிறார்கள். உங்கள் பள்ளிக்கூடத்தில் இன்ஸ்பெக்ஷன் எப்படி நடந்தது; என்று வெளி விசாரணையும் நடத்துகிறார்கள்.

இதுவரையிலும் திருத்தப்படாத நோட்டுகளுக்கெல்லாம் அப்பொழுது அப்பொழுது திருத்தப்பட்டன போலக் காட்டுவதற்காக வெவ்வேறு தேதிகளைப் போட்டுத் திருத்துகிறார்கள். தலைமையாசிரியரோ சொல்ல வேண்டாம். மணிக்கு ஒரு சர்க்குலர் அனுப்பிக் கொண்டிருக்கிறார். வருகின்ற இன்ஸ்பெக்டர் கொஞ்சம் கடுமையானவர் என்று கேள்விப்பட்டவுடன், இன்னும் சுறுசுறுப்புடன் வேலை செய்கின்றார். கோட்டு, தலைப்பாகை இவை எல்லாவற்றையும் கழற்றி வைத்துவிட்டுக் குடுமியைக் கையால் கோதிக் கொண்டு பஞ்சகச்சத்துடன் பள்ளிக் கூடத்தைச் சுற்றிவருகின்றார். ஊருக்குப் போகவேண்டுமென்றால் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னடியே தலை வெட்டிக் கொள்வது போல, தோட்டத்திலுள்ள பூஞ்செடிகள் எல்லாம் தலையை வெட்டிக் கொண்டு நிற்கின்றன.

கோவிந்த ராஜப் பிள்ளை இவற்றை எல்லாம் பார்த்து விட்டு ஏன் இந்தத் தலைமையாசிரியர் இப்படிப் பயப்படுகிறார், பாவம் வந்தால் வந்து பார்த்துவிட்டுப் போகட்டுமே. அப்படி இவர் இத்தனை நாட்களும் வேலைசெய்திருந்தால் சுயராஜ்யம் கிடைத்திருக்குமே என்று கிண்டல் செய்வார். அவர் தமிழ் வாத்தியார். அவரை யார் என்ன செய்யக் கிடக்கின்றது? வருகின்ற இன்ஸ்பெக்டர்களுக்குத் தமிழ் தெரியாது என்று அவருக்குத் தெரியும். வந்தாலும் ஏதாவது கேள்விகள் கேளுங்கள் என்று சொல்லப் போகிறார்கள். வினைத் தொகை என்றால் என்ன? என்று ஒரு கேள்வியைக் கேட்டு விட்டால் போகின்றது. மாணவர்கள் என்ன பதில் சொன்னாலும் பாதகமில்லை என்னும் தைரியம் நிறைய உடையவர்.

தலைமையாசிரியர் அவரிடம் அடிக்கடி வந்து சிலபஸ் (Syllabus) தயார் செய்து வையுங்கள்! போதனை முறைக் குறிப்பு (Notes of Lesson) இப்பொழுதாவது தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப் போவார். போதனை முறைக்குறிப்பு அவர் எழுதுவதே இல்லை. ஆகட்டும் அப்படியே செய்து விடுகிறேன் என்று மட்டும் சொல்வார். அது அவருக்கு வேண்டாத வேலை கூட. அவரால் எழுதப்பட்ட புஸ்தகங்கள்தான் அங்கே பாடமாக இருக்கின்றன. நிறைய அநுபோக முடையவர் அவர்; இதுவும் அந்தத் தலைமையாசிரியருக்குத் தெரியும். தெரிந்தாலும் இன்ஸ்பெக்டர் கேட்டால் இல்லை என்று ஒன்றும் நாம் சொல்லக்கூடாது என்பதற்காக வாத்தியார்களை யெல்லாம் கரையான் போல அரித்துக் கொண்டே இருப்பார். புதிதாக வேலைக்கு வந்தவர்களிடத்தில் இது எழுதுங்கள் என்று சொல்ல வேண்டியது நியாயம். கடனுக்காகச் செய்கின்ற இந்த முறை ஒழிந்தால்தான் பள்ளிக்கூடங்கள் உருப்படும் என்று அடிக்கடி தலைமை யாசிரியரிடத்திலேயே இவர் சொல்லுவார்.

வியாச நோட்டுகளையும் அவர் முழுவதும் திருத்துவதில்லை. எப்படி அவரால் திருத்தமுடியும்? பாவம். வாரத்திற்கு 200 நோட்டுகள் என்றால் நடக்கின்ற காரியமா? என்ன சார்! வியாச நோட்டையும் அப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருத்தி விடுங்கள் என்று மட்டும் சொல்லத் தவறுவதில்லை தலைமையாசிரியர்.

இன்ஸ்பெக்டர்களை எப்படியும் ஏமாற்றிவிடலாம் என்ற எண்ணம் மட்டும் பிள்ளையவர்களுக்கு உண்டு. கடந்த பல வருஷங்களாக இதைச் செய்து வந்தவர்தானே! ஒருவர்க்காக வேலை செய்ய வேண்டும் என்று அவர் வேலை செய்திருந்தால் ஐந்தாவது வருஷத்திலேயே

அவர் செத்துப்போயிருக்க வேண்டாமா? "கறக்கிறது உழக்கு உதைக்கின்றது பதக்கு'' என்பதுதான். பள்ளிக்கூடம் எப்படியிருக்கின்றது சார்! என்று கேட்டால் அவரிடமிருந்து, வரும் பதில்; வரட்டும் அந்த இன்ஸ்பெக்டர்களிடத்திலே இத்தனை நோட்டுகளை வார வாரம் திருத்துவதாயிருந்தால் பிழைப்பாரு என்று என்று கேட்டே விடுவது என்று ஒன்றையும் திருத்தாமலேயே இருந்தார்.

வர இருந்த அதிகாரிகளும் ஒருநாள் வந்தே விட்டார்கள். அன்று பள்ளிக்கூடம் முழுவதுமே பரபரப்பாக இருந்தது. மணியடிப்பதற்காக உட்கார்ந்து கொண்டு தூங்கிவழியும் வேலைக்காரனும் பரபரப்பாக எழுந்து நின்று கொண்டிருக்கின்றான். பையன்கள் கூட ஒரு வகுப்பிலிருந்து மற்றொருவகுப்பிற்குப் போகின்றவர்கள் வரிசையாகப் போகின்றார்கள்.

இதையெல்லாம் பார்த்துப் பிள்ளையவர்கள் சிரித்துக் கொண்டே நடுங்குகின்ற நடுக்கத்தைப் பாருங்களேன் என்று சொல்வார்.

வருகின்ற இன்ஸ்பெக்டர்களுள் தமிழ் பேசத் தெரிந்தவர்கள் தமிழ் வகுப்பிற்குப் போக ஆரம்பித்து விடுவார்கள். நான்காவது பாரத்தில் இன்ஸ்பெக்டர் இருக்கின்றார்; தமிழ் வாத்தியாரை அழைத்துவரச் சொன்னார் என்று வந்தான் வேலைக்காரன்.

இதோ வந்து விட்டேன் என்று சொல்லித் தலைப்பாகையைத் தலையில் வைத்துக் கொண்டு புறப்பட்டார். நமஸ்காரம் என்று சொல்லி வகுப்பினுள்ளே நுழைந்தார்.

தமிழில் ஏதாவது கேள்வி கேளுங்களேன்.

அப்படியே கேட்கின்றேன்.

மனோன்மணீய ஆசிரியர் என்று ஆரம்பித்தார்.

வேண்டாம். வசனத்தில் ஏதாவது கேள்வி கேளுங்களேன்.

மனோன்மணீயத்தை வசன நடையில் எழுதியிருக்கிறார்கள் அதில்தான் கேள்வி கேட்க ஆரம்பித்தேன்.

அப்படியானால் கேளுங்கள்.

வேண்டாம்; வேறுபாடத்தில்தான் கேள்வி கேட்கின்றேனே.

உன்னைத்தான்! பண்டைத்தமிழர்கள் நிலத்தை எத்தனைவகையாகப் பிரித்தார்கள்?

ஐந்தாகப் பிரித்திருக்கிறார்கள்.

அவை என்னென்ன?

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை.

குறிஞ்சி என்றால் என்ன?

காடும் காட்டைச்சார்ந்த இடமும் சார்! (மலையும் மலையைச் சேர்ந்த இடத்திற்கும் குறிஞ்சி என்று பெயர்)

இன்ஸ்பெக்டர் முகத்தைத் திரும்பிப் பார்த்தார். அவருக்கும் இதற்கும் ஒன்றும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை அவர் முகக் குறிப்பிலிருந்து. உட்கார் என்று பலமாகச் சொல்லிவிட்டார்.

முல்லை என்றால் என்ன?

மலையும் மலையைச் சேர்ந்த இடமும் சார் (காடும் காட்டைச் சேர்ந்த இடத்திற்கும் முல்லை என்று பெயர்.)

சரி உட்கார்.

தப்பான பதிலை இவர் ஆமோதித்து உட்கார் என்று சொன்னவுடனே மாணவர்களுக்கோ சந்தோஷம் அதிகமாயிற்று. நான் சொல்லுகிறேன்; நான் சொல்லுகிறேன் என்று கையைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டார்கள்.

பாலை என்றால் என்ன?

வயலும் வயலைச் சேர்ந்த இடமும் சார் (மணல் வெளிக்குப் பாலை என்று பெயர்.)

சரி உட்கார்!

நன்றாகப்பதில் சொல்லுகின்றார்களே! கேள்விகள் போதும். பாட்டு எதுவும் சொல்லச் சொல்லுங்களேன்.

நான் சொல்லுகின்றேன் என்று ஒருபையன் புறப்பட்டு "நீரிற் குமிழி இளமை" என்று இரண்டாவது பாரத்திலே படித்த பாட்டைப் பாடித் தீர்த்தான்.

சரி உட்கார்!

போதனா முறைக் குறிப்பு வைத்திருக்கின்றீர்களோ?

அதெல்லாம் ஒழுங்காக எழுதிவைத்திருக்கின்றேன்.

வியாசங்கள் கொடுத்து எழுதச் சொல்லுகின்றீர்களா?

அதெல்லாம் கொடுத்து உடனுக்குடனே திருத்தி விடுகிறேன்.

சரிவாருங்கள் போகலாம். தமிழ் வகுப்பு நன்றாகத்தான் இருக்கின்றது.

முடிந்தது இன்ஸ்பெக்ஷன். ரொம்ப சந்தோஷம்.

பையன்களுக்குச் சொல்ல வேண்டுமா சந்தோஷத்திற்கு! தமிழ் வாத்தியார் ஏமாற்றி விட்டாரடா என்று சத்தம் போட்டுக் கொண்டே புறப்பட்டார்கள்.

நல்ல வேளையாகத் தலைமையாசிரியர் வழியில் நின்று சத்தம் போடாது போங்கள் என்று சொல்லிவைத்தார். ஏனைய பாடங்களுக்கெல்லாம் இன்ஸ் பெக்ஷன் ஒழுங்காகத்தான் நடந்தது. இன்ஸ்பெக்ஷன் முடிந்தவுடனே மானேஜர் அவர்களுக்குத் தேநீர் விருந்தளிப்பார். எதற்காகக் கொடுக்கின்றாரோ தெரியவில்லை. வாத்தியார்களும் இதற்கு அழைக்கப்படுவார்கள். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இப்படித் தேநீர் கொடுப்பதினாலேதான் அரக்குத் திணித்தாற் போல இவர்கள் இருக்கின்றார்கள் என்று கிண்டல் செய்து கொண்டே கூட்டத்திற்குப் போனார் பிள்ளையவர்கள்.

சாப்பிட்டு முடிந்த வுடனே பள்ளிக்கூடத்தின் பெருமையை வானளாவப் புகழ்ந்து விட்டு ஒவ்வொரு பாடத்திலுள்ள குற்றங் குறைகளையும் திருத்த வேண்டிய முறைகளையும் எடுத்துச் சொல்லிக்கொண்டேவந்தார். தமிழைப்பற்றிச் சொல்லும் பொழுது தமிழ் மிக நன்றாகப் போதிக்கப் படுவதாகவும் தமிழ்வாத்தியார் சொல்வதை ;மாணவர்கள் உற்சாகமாகக் கவனிக்கின்றார்கள் என்பதாகவும் சொல்லி முடித்தார். ஆனால் அத்துடன் நிறுத்தவில்லை. தமிழ் வாத்தியாருக்கு இன்னும் கொஞ்சம் பொது அறிவு இருந்தால் நன்றாக இருக்குமென்றும் அதற்காகத் தாங்கள் ஒரு வகுப்பு வைத்து நடத்தப் போவதாகவும் அதில் சில நாட்கள்வந்து கேட்பார்களானால் பிறகு சரியாகப்போய் விடும் என்றும் சொல்லி முடித்தார்.

யாருக்குப் பொது அறிவு இல்லை என்று கேட்டார் பக்கத்தில் உட்கார்ந்திருந்த வாத்தியார் மற்றொருவரை.

இவர்களுக்கே இது தான் வேலை. பொது அறிவு இருக்கின்றவர்கள் மாதிரி வகுப்புவைத்து நடத்தப்போகிறார்களாம். தமிழே தெரிய வில்லையே இந்த அப்பாவிகளுக்கு. நான்கு ஐந்து வருஷமாக நானும் பார்க்கின்றேன். வருகின்றவனெல்லாம் பொது அறிவு என்கின்ற பாட்டைத்தானே பாடிவிட்டுப் போகின்றான். நான்தமிழில் வித்துவான், ஆங்கிலத்தில் B. O. L பாஸ் பண்ணி யிருக்கிறேன். எனக்கு என்ன பொது அறிவை இவர்கள் புகட்டப்போகின்றார்களாம்! சம்பளத்திற்கு ஒன்றும் செய்ய முடியவில்லை இவர்களால்.

பொது அறிவாம்! எதைப் பொது அறிவு என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்களோ தெரியவில்லையே. சயின்ஸா, சரித்திரமா, இங்கிலீஷா, தமிழில்லையா, இத்தனையும் சேர்ந்ததா; எதை இவர்கள் பொது அறிவு என்று நினைக்கின்றார்கள் என்று தெரியவில்லையே. இன்னின்ன பாடத்திற்கு இன்னின்ன குற்றம் சொல்ல வேண்டுமென்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கே போனாலும் அதையே சொல்லிக்கொண்டு போகிறார்கள்.

இங்கிலீஷிலோ அல்லது தமிழிலோ எழுத்துப் பிழை வந்தால் அதை அடித்து விட்டுப் பக்கத்தில் சரியான எழுத்தை எழுதிவந்தோம். போனவருஷம் வந்தாரே அந்தப் புண்ணியவான், நீங்கள் அதைத் திருத்தக்கூடாது, கோடு கிழித்து விட்டுப் போங்கள். அப்பொழுதுதான் மாணவர்கள் என்ன பிழையிருக்கின்றது என்று சிந்திப்பார்கள் என்று சொல்லி விட்டுப் போனார். இந்த வருஷம் முழுவதும் அப்படித்தான் செய்து வந்தோம். ஆனால் இவர் என்ன சொன்னார் பார்த்தீர்களா! மாணவர்கள் அவ்வளவு அக்கறை கொண்டு அதைத் திருத்த மாட்டார்கள்! திருத்தத்தைப் பக்கத்தில் எழுது வைத்து விடுங்கள் என்று சொல்லுகின்றார். இதில் யார் பைத்தியக்காரன்?

இவர்களுக்குள்ளே ஏதாவது திட்டம் உண்டா? என்ன கல்வியை இவர்கள் முன்னேற்றுகிறார்களாம்! வீணுக்குச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு வாயில் வந்ததையெல்லாம் உளறுகின்றார்களே என்று பெரிய பிரசங்கம் ஒன்று வைத்தார் தலைமையசிரியர் வெங்கடேசன் முன்னிலையில், இன்ஸ்பெக்ஷன் முடிந்த அடுத்த நாள்.

ஆமாம்! எல்லோரும் அப்படித்தான் என்று சொல்லிக் கொண்டே தலையை அசைத்தார்.

புரசையில் தமிழாசிரியர்களுக்குப் பொது அறிவு உண்டாவதற்காக வகுப்பு ஒன்று நடத்துகின்றோம்; உங்கள் தமிழாசிரியரையும் அனுப்புங்கள் என்று கடிதம் வந்திருக்கின்றது இன்ஸ்பெக்டரிடமிருந்து தலைமையாசிரியருக்கு. பிள்ளையவர்களைப் போய்வருமாறு வற்புறுத்துகின்றார் அவர். யாருக்கு? என்ன வகுப்பு? என்கிறார் பிள்ளையவர்கள்.

கிமாயணம்.

முன்காலத்திலெல்லாம் இராமாயணக் கதைகள் பாரதக்கதைகள் படித்துக் கொண்டிருந்தார்களே. இப்பொழுது பார்த்தீர்களா? எல்லோரும் சிறுகதைகளைப் படித்துக் கொண்டிருக்கிறார்களே என்றேன்.

என்ன கதையப்பா! வாலும் இல்லை; காலும் இல்லை என்னமோ கதை யென்று அவர்கள் வீட்டு விஷயங்களை யெல்லாம் எழுதி வைத்து விடுகிறார்கள். அது கதையாம்! எனக்குப் பிடிப்பதே இல்லை என்றார் பண்டித ரகுநாத நாயுடு அவர்கள்.

அப்படிச் சொல்லாதீர்கள் சார்! எவ்வளவு நன்றாக இருக்கின்றது பாருங்கள்.

நன்றாக இருக்கின்றது உண்மைதான். நல்ல விஷயங்களைப்பற்றி எழுதக்கூடாதோ?

எல்லாம் நல்ல விஷயங்களாக இருக்கவேண்டியது கட்டளையா என்ன? நல்ல விஷயங்களுக்குத்தான் ராமாயணம் பாரதங்கள் இருக்கின்றனவே!

இருந்தாலும் பாஷையை அல்லவா இவர்கள் அழித்து விடுகிறார்கள். பேசுகின்றாற் போலவே அல்லவா எழுதுகின்றார்கள்.

அதுபோல சிறுகதைகள் எழுதுவது கூட ரொம்பக் கஷ்டம். நானும் எத்தனையோ முறை கதைகள் எழுதலாம் என்று தொடங்கிய துண்டு. ஆனால் முடிய வில்லையே!

என்ன சார்! இதைப் போலக் கதை எழுதுவதாயிருந்தால் நிமிஷத்திற்கு ஒருகதை எழுதுவேன்; வீணாக நாழிகையைப் போக்குவானேன் என்பதற்காக இதில் ஈடுபடுவதில்லை.

எங்கே! ஓய்வாக இருக்கின்ற பொழுது ஒருகதை எழுதுங்கள் பார்க்கின்றேன்.

ஓய்வு கிடைக்கவாவது, இப்பொழுதே எழுதித்தருகின்றேன் பாருங்கள் என்று சொல்லி, பதினைந்து நிமிஷத்திற்குள் ஒன்றை எழுதி என்கையில் கொடுத்து படித்துப் பாருங்கள் என்றார். அதைப் படிக்கின்றேன் கேளுங்கள்.

கோசலா தேசத்தை, தசரதர் என்று ஒரு சக்கரவர்த்தி ஆண்டு வந்தார். அவர்க்கு நீண்ட நாட்களாகவே புத்திரர்கள் இல்லை. அதற்காக அவர் புத்திரகாமேஷ்டியாகம் செய்து நான்கு குழந்தைகளைப் பெற்றார். இராமன், லட்சுமணன், பரதன், சத்துருக்கனன் என்பன அவர்களுடைய பெயர்கள். நான்கு பேரும் சேர்ந்து ஒரு குருவினிடத்திலேயே யானை யேற்றம் முதலிய அரசர்களுக்குரிய பயிற்சிகளை யெல்லாம் பயின்று வந்தார்கள். சிறுவபது முதற் கொண்டே இராமனும் லட்சுமணனும் உயிர் நண்பர்களாயிருந்தார்கள். பரதனும் சத்துருக்கனனும் நண்பர்களாயிருந்தார்கள்.

சிறுவயது முதற் கொண்டே இராமனுக்கும் பரதனுக்கும் பகைமை இருந்து வந்தது. பரதனுடைய தாயாருக்குத் தசரதனிடத்தில் மிகுந்த செல்வாக்கிருந்தது. தான் முடி சூடுவதற்கு இராமன் தடையாக இருக்கின்றானே என்று பரதன் நினைத்ததில் ஆச்சர்யம் இல்லையல்லவா! இராமனை எப்படியாவது கொலை செய்து விட வேண்டுமென்று நினைத்தான். இராமரோ மிக நல்லவர். லட்சுமணனும் அப்படித்தான். இருவரையும் ஒழித்து விடவேண்டுமென்பது தான் பரதனின் எண்ணம்.

ஒருநாள் ஆற்றிலே விளையாடும் பொழுது கழுமரம் ஒன்றை நிறுத்திவைத்து அதில்பாயுமாறு சூழ்ச்சிகளெல்லாம் செய்தார்கள். இதிலிருந்து இவர்கள் தப்பித்துக் கொள்ளவே இன்னம் எப்படிக் கொலைசெய்வதென்று சூழ்ச்சிகள் செய்தார்கள். ஒரு நாள் இருவரும் படுத்துறங்கும் பொழுது அந்த வீட்டில் தீவைத்தார்கள். முன்னாலேயே செய்து வைத்த சுரங்கத்தின் வழியாகத் தப்பி வெளியே ஓடி வந்து விட்டார்கள் இருவரும்.

ஒருநாள் பரதன் இராமனைச் சூதாடக் கூப்பிட்டான். இராமரும் சூதாட ஒத்துக் கொண்டு சூதாடவே, தன்னிடத்தில் உள்ள செல்வங்கள் எல்லா வற்றையும் இராமர் தோற்க வேண்டியதாயிற்று. பிறகு தமக்கு இனிமேல் வரப்போகின்ற அரசாட்சியையும் பணையமாக வைத்தார். அதையும் தோற்று விட்டார்.

உடனே பரதன் நாட்டைவிட்டுக் காட்டிற்குப் போய் 14 வருஷம் இருக்கவேண்டும் என்றும், பிறகு ஒரு வருஷம் அஞ்ஞாதவாசமும் செய்து விட்டு வந்தால் நாட்டில் பாதி தருவதாகவும் வாக்களித்தான். இராமன், லட்மணன், சீதை மூவரும் அயோத்தியை விட்டுப் புறப்பட்டனர். நகரத்திலுள்ள மக்களனைவரும் துக்கசாகரத்தில் ஆழ்ந்தனர்.

தண்டகாரணிய வனத்தில் பர்ணகசாலை ஒன்று ஏற்படுத்திக் கொண்டு அதில் வாழ்ந்துவந்தார்கள்.

காட்டிலுள்ள காய் கனிகளையும் கிழங்குகளையும் சாப்பிட்டுப் பதினான்கு வருஷங்களையும் கழித்தனர். இன்னம் ஒருவருஷம் அஞ்ஞாத வாசம் செய்வதற்கு எங்குச் செல்வது என்று நினைத்துக் கொண்டிருந்தனர்.

சீதையின் அழகைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த ஜனகன் எப்படியாவது சீதையைக் கொண்டு போக வேண்டுமென்று நினைத்தான். அவனுடைய சூழ்ச்சியால் பெண் மான் ஒன்று இராமர் இருக்கும் சாலை முன்பு வந்து நின்றது. அதைக் கண்ட சீதை அந்தப் பொன் மானைத் தனக்குப் பிடித்துத் தரவேண்டு மென்று கேட்டாள். இராமர் அது பொன் மானல்ல என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவள் கேட்க வில்லை. உடனே இராம லட்மணர்கள் இருவரும் மானைப் பிடிப்பதற்குத் துரத்திக் கொண்டு சென்றனர். பல நாட்கள் ஆயின. போனவர்கள் என்ன ஆனார்களோ என்று வருந்தினாள். யாராவது அவர்களைக் கொலை செய்து விட்டார்களோ அல்லது வழிதெரியாது எங்கேயாவது போய் விட்டார்களோ என்று வருந்திய சீதை தன்னுடைய தந்தை ஊருக்காவது போய் அவருடைய உதவியால் தன் கணவனைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று நினைத்தாள்.

நடக்க முடியாமல் பல நாட்கள் நடந்து வழிப்போக்கர்களின் உதவியைக் கொண்டு இலங்கையை அடைந்தாள். இராவணன் ஆச்சரியத்துடன் நடந்த செய்திகளை விவரமாகக் கேட்டுக் கொண்டு இருவரும் இருக்கின்ற திசையை அறிந்து வருவதற்காக ஏவலாளர்கள் பலரையும் ஏவினான்.

மானைத் தேடிப் போனவர்களோ பல நாட்கள் தொடர்ந்து வந்தும் பிடிக்க முடியாமையால் இதைக் கொன்று விடுவதே நல்லது என்று நினைத்து அம்பு எய்து கொன்று விட்டுத் திரும்பினர்.

வருகின்றவழியில் கார்க்கோடன் என்னும் பாம்பு நெருப்பில் அகப்பட்டுக் கொண்டு தத்தளித்தது. அவ்வழியே போன இராம லட்சுமணர்களைத் தன்னை வெளியே எடுத்துக் காப்பாற்ற வேண்டு கேட்டுக் கொண்டது. தான் அவர்களை ஒன்றும் செய்ய வில்லையென்றும் உறுதிகூறவே அவர்கள் இருவரும் அதைத்தூக்கி வெளியே போட்டார்கள். 'பாம்புக்குப் பால் வார்க்கலாமா?' என்பது பழமொழி யல்லவா! உடனே பாம்பு இருவரையும் கடித்து விட்

டது. இருவருடைய உருவமும் மாறிவிட்டது. கார்க்கோடகனைப் பார்த்து இப்படிச் செய்தது தகுதிதானு என்று கேட்டனர். கார்க்கோடகனும் உங்களுக்கு நல்லதுதான் செய்திருக்கின்றேன். நீங்கள் ஒருவருஷம் அஞ்ஞாதவாசம் செய்ய வேண்டு மல்லவா! அந்த ஒருவருஷம் முடிந்தவுடனே உங்களுடைய பழைய உடம்பைப் பெறுவீர்கள் என்று சொல்லிற்று.

பிறகு இருவரும் சீதையைக் காணவில்லை. அஞ்ஞாதவாசத்திற்குரிய நாள்வந்து விட்டமையால் சீதையைத் தேடிப் பார்ப்பதற்கு நாள் இல்லாமல் எந்த நாட்டிலே சென்று வாழலாம் என்று நினைத்து ஜனகனுடைய நாட்டை அடைந்தனர். ஜனகனுடைய அரண்மனையில் இராமன் தேர் ஓட்டுகின்ற சாரதியாகவும், லட்சுமணன் குதிரைகளுக்குக் கொள் வேக வைக்கின்றவனுகவும் அமர்ந்தனர்.

ஒருநாள் இராமன் திண்ணையில் உட்கார்ந்திருக்கின்ற பொழுது அவ்வழியே சென்ற அந்தணன் ஒருவன்,

"கானகத்துக் காதலியைக் காரிருளில் கைவிட்டுப் போனதுவும் வேந்தர்குப் போதுமோ" என்று சொல்லிக் கொண்டே போனுன்.

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த இராமன் அதன் கருத்தைத் தெரிந்து கொண்டு அவனைக் கூப்பிட்டு,

"ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனே காண்"

என்று சொன்னுன். அந்த அந்தணன் இவர் தான் இராமனுக இருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டு சீதையிடத்தில் சென்று நடந்ததைத் தெரிவித்தான். அந்த நாடு மிகவும் செழிப்பாகவும் இருக்கின்றது என்பதையறிந்த சீதை அவன்தான் இராமனுக இருக்கவேண்டு மென்று முடிவு செய்தாள். ஜனகன் முன்னமேயே தன்னைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று விரும்பினுன் என்பது அவளுக்கு தெரியுமாதலால் மீண்டும் ஒரு சுயம்வரத்தைச் சீதை வைத்திருக்கிருள் என்பதைத் தெரிவித்தால் ஜனகன் வருவான் அவனுடைய தேரை ஓட்டிக் கொண்டு இராமனும் வருவான், ஆகையால் இராமனைக் கண்டுபிடித்து விடலாமென்று நினைத்தாள். உடனே இராவணனுக்குத் தெரியாமல் சீதைக்கு இரண்டாம் சுயவரம் நடக்கப் போகிறதென்றும் அதற்குத் தாங்கள் வரவேண்டுமென்றும் இராவணன் எழுதியது போல் கடிதம் ஒன்று எழுதிக் கொடுத்தனுப்பினுள்.

கடிதத்தைப் பார்த்தவுடன் ஜனகனுக்கு மிகுந்த உற்சாக முண்டாயிற்று. தேர்ச் சாரதி இராமனைக் கூப்பிட்டு, செய்தியைச் சொல்லி, தேரைச் சித்தப்படுத்தச் சொன்னான். இராமன் செய்தி யைக் கேட்டவுடனே கலங்கினான். ஆரியனுடைய பரம்பரையில் வந்த நம் குலத்தில் ஒருநாளும் இப்படிப்பட்ட செய்தியே நடந்ததில் லையே என்று வருந்தினான். ஒருவேளை நம்மைக் கண்டு பிடிப்ப தற்குச் சீதை செய்த சூழ்ச்சியாக இருந்தாலும் இருக்கு மென்று ஆறுதல் செய்து கொண்டு, கொள்ளு சமையல் செய்யும் லட்சுமணனையும் தன்னோடு வருமாறு கேட்கவே அவனும் ஒத்துக் கொண்டான். ஜனகன் ஆடையாபரணங்களால் தன்னை அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டான். தேரோ மிக வேக மாய்ச் சென்று இலங்கையை அடைந்தது. சுயம்வரத்திற்குரிய அலங்காரங்கள் ஒன்றும் இல்லாதது கண்டு ஜனகன் சந்தேகித்தான். அரண்மனையை அடைந்தவுடன் இராவணன் ஜனகனை வரவேற்று எதிர்பாராத வருகையாயிருக்கிறதே என்று கேட்டான். பார்த்து விட்டுப் போகலா மென்று வந்ததாக ஏதோ சொல்லிச் சமாளித்துக் கொண்டான் ஜனகன்.

இராமன் குதிரைகளை விட்டு விட்டு ஓரிடத்திலிருந்து களைப் பாறினான். லட்சுமணனே குதிரைகளுக்கு வேண்டிய கொள்ளை வேக வைத்துக் கொண்டிருந்தான். சீதை மாடியிலிருந்து இருவரையும் பார்த்தாள். இவர்களாகத்தான் இருக்க வேண்டு மென்று நினைத்துக் கீழே இறங்கி வந்தாள். பக்கத்தில் நின்று கொண்டிருந்த இராமனை வேகவைத்த கொள்ளிலே கொஞ்சம் கொண்டுவருமாறு கேட்டாள். இராமனும் கொள்ளைக் கொஞ்சம் அள்ளிக்கொண்டுவந்து அவள் கையிலே போட்டான். போடுகின்ற பொழுது சீதை அவனுடைய கையிலே இருக்கின்ற மோதிரத்தைப் பார்த்தாள். அது தன்னு டையதே என்றும் அவன் இராமனே என்றும், தீர்மானம் செய்தாள்.

இராவணனுக்கு இதைத்தெரிவிக்கவே இராவணனும் அவர் களை மிகுந்த அன்போடு வரவேற்றான். அஞ்ஞாதவாசம் முடிந்து விட்டமையால் அவர்களுடைய வடிவமும் பழைய வடிவ மாயிற்று. சீதை இதனைக் கண்டு மிகுந்த ஆச்சரியப்பட்டாள்.

இராமன் முதலிய மூவரும் இராவணனையும் அழைத்துக் கொண்டு அயோத்திக்கு வந்து சேர்ந்தார்கள்.

பரதனிடம் தங்களுக்குக் கொடுப்பதாக வாக்களித்திருந்த பாதி நாட்டைக் கேட்டனர். பரதன் அதற்குக் கொஞ்சமும் இணங்காமல்,

தைரிய மிருந்தால் எப்படி நாட்டை இழந்தீர்களோ அப்படியே நாட்டை வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டான். மீண்டும் இருவரும் சூதாடினர். இராமன் தன்னுடைய பாதி நாட்டை அடைந்ததோடல்லாமல் பரதனுடைய பாதி நாட்டையும் சூதாட்டத்தின் மூலம் ஜெயித்து விட்டான். கோசலநாட்டிற்கே சக்கரவர்த்தியானான் இராமன்.

நல்லதொரு நாளைப் பார்த்து இராமனுக்கு முடிசூட்டி விட்டு இராவணனும் இலங்கைக்குத் திரும்பினான்.”

நன்றாக இருக்கின்றதே கதை! ரொம்ப பேஷ்!!

எல்லாக் கதைகளும் இப்படித்தானே எழுதப்பட்டன?

இந்தக்கதைக்கு என்னபெயர் கொடுக்கப் போகிறீர்கள்? பாரதமா? அல்லது இராமாயணமா?

ஏதோ பெயர் வைத்துக் கொள்ளுங்களேன். ரீமாயணம் என்று தான் வைத்துக் கொள்ளுங்களேன் என்றார் பண்டித ரீகுநாத நாயுடு அவர்கள்.

The Mercantile Press, Madras. Q H. No. 264-D. July 1947.